யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்





# ஞானச்சுடர்

## மலர்

மாசி 1999




வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



" அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்
தன்நோய் போல் போற்றாக் கடை. "

பொருள்:-

மற்ற உயிரின் துன்பத்தை தன் துன்பம் போல்
கருதி காப்பாற்ற வேண்டும்.

ஸ்ரீ

அருணாசலசிவ அக்ஷர மணமாலை

நூல்

அருணாசலசிவ அருணாசலசிவ
அருணாசலசிவ அருணாசலசிவ!

56) நீநா னறப்புலி நிதங்களி மயமா
நின்றிடு நிலையரு ளருணாசலா (அ)

57) நுன்னுரு வுனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென் றருணாசலா (அ)

58) நூலறி வறியாப் பேதைய னென்றன்
மாலறி வறுத்தரு ளருணாசலா (அ)

59) நெக்குநெக் குருகியான் புக்கிட வுனைப்புக
னக்கனா நின்றனை யருணாசலா (அ)

60) நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ
மோசஞ் செயாதரு ளருணாசலா (அ)

[ தொடரும் ... -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 14

1999 மாசி

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1) | ஆலய வழிபாடும் சமய சமூகத் தொண்டுகளும் | 1 - 2 |
| 2) | சேவடி படரும் செம்மல் உள்ளம் | 3 - 5 |
| 3) | ஐயாறு வாயால் அழை | 6 - 9 |
| 4) | துறவியரின் தன்மை | 10 - 14 |
| 5) | விநாயகருக்கு யானை முகம் எவ்வாறு வந்தது | - 15 |
| 6) | நான்கு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாறு | 16 - 18 |
| 7) | அம்பிகையின் கோபமும் சீதா கல்யாணமும் | 19 - 22 |
| 8) | சிந்தனைத் துளிகள் | 23 - 25 |
| 9) | பிழை உடன்படுதல் | 26 - 27 |
| 10) | சந்நிதியான் | 28 - 31 |
| 11) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள் | 32 - 35 |
| 12) | முருகேசு சுவாமிகளின் இரண்டாவது குரு பூசைத்தினம் | 36 - 38 |
| | மாணவர் பக்கம் | |
| 13) | இந்து சமய விடைகள் | - 39 |
| 14) | யாழ்ப்பாண மன்னர்கால இலக்கியங்கள் | 40 - 41 |
| 15) | Easy Way to Learn English (Part—14) | 42 - 44 |

அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம் தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

க. செல்வரட்ணம் J. P.
( ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி. )

சி. சுப்பிரமணியம்
( லஷ்மி வாசம், சமரபாகு. )

க. வேலுப்பிள்ளை
( 'வேலகம்' கரணவாய் தெற்கு, கரவெட்டி. )

தலைவர்
( கலைமகள் சனசமூக நிலையம், தொண்டைமானாறு. )

செயலாளர்
( கருணையம்பதி சனசமூக நிலையம், கரணவாய் மத்தி. )

பா. இராசேந்திரம்
( கிராம சேவையாளர், கெருடாவில் தெற்கு. )

அதிபர்
( யா / தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம். )

வே. பரமானந்தம்
( அரசடி, தொண்டைமானாறு. )

க. கதிர்காமத்தம்பி
( மல்வியோடை, வல்வெட்டி. )

இரா. ஸ்ரீநடராசா
( லிங்கோ, கல்விமன்றம் உடுப்பிட்டி. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
# தை மாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

1999ஆம் ஆண்டு தை மாத மலருக்கான வெளியீட்டுரையை யா/ ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. சிவநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள். அவர் ஒளி எவ்வாறு இருளை அகற்றுகின்றதோ அதேபோல ஞானச்சுடரும் எமக்குள்ளே இருள் போன்று இருக்கின்ற கூடாத இயல்புகளை அகற்றி எமது வாழ்க்கைக்குத் தேவையான நல்வழிகளைக் காட்டுகின்றது என்பதை உதாரணங்கள் மூலம் வெளிப்படுத்தினார்.

ஒரு வருடத்திற்கு ஒரு மலர் வெளியிடுவதே பிரச்சனையாயிருக்கும் பொழுது பொருத்தமான பல படங்களுடன் கவர்ச்சியான முறையில் ஞானச்சுடரை மாதாமாதம் தொடர்ந்து வெளியிடுவது பாராட்டப்படவேண்டியது எனவும் இதற்கெல்லாம் முருகப்பெருமானுடைய திருவருளே காரணம் எனவும் குறிப்பிட்டார்.

## மதிப்பீட்டுரை:-

யாழ்பல்கலைக்கழக கல்வியத்துறை பேராசிரியர் திரு. சின்னத்தம்பி அவர்கள் இந்தமலருக்கான மதிப்பீட்டுரையை மேற்கொண்டார்கள்.

ஞானச்சுடர் மலருக்கு ஆய்வுரை செய்வதென்பது பொருத்தமற்றது. இந்தமலரை புனிதமான மலராக நாங்கள் மதிக்கவேண்டுமே தவிர இதனைக் கீறிக் கிழித்து ஆய்வு செய்வதென்பது பொருத்தமற்றது எனவும் அவர் குறிப்பிட்டார். இந்தவகையில் ஞானச்சுடர் வெளியீட்டாளர்களே ஆய்வுரை என்பதை மாற்றம் செய்து மதிப்புரை என்ற பதத்தை பயன்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது எனவும் குறிப்பிட்டார்.

இந்தமலர் தெய்வப்புலவர் வள்ளுவருடைய குறளில் தொடங்கி இறுதியில் மாணவர் பக்கத்துடன் முடிவடைவதும் ஒரு சிறப்பான அம்சமெனக் குறிப்பிட்டார். அதுமட்டுமன்றி வாசகர் அபிப்பிராயங்களை பரிமாறுவதற்கும் சந்தர்ப்பம் கொடுத்து பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கியதாகவும் இது வெளிவந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு மக்களிடையே அகஒளியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தமலர் தொடர்ந்து பிரகாசிப்பதற்கு இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடரே வாழ்க!

தொண்டை மானாறெனும் நதியருகே
தொண்டர்கள் பலரைக் காத்தருள் புரியும்
தொப்பையப்பனின் சோதரனே முருகா!

தொன்றுதொட் டின்று வரை சைவமெனும்
தொன்மை மிகு சமயத்தை வாழவைக்கும்
தோடுடைய செவியனின் மைந்தனே முருகா!

மண்ணுலகில் மலர் வாசம் வீச
மலம் மூன்றையும் அழித்தொழிக்க மாதொருமுறை
மலரும் மலரே ஞானச்சுடரே வாழ்க!

தீச்சுடர் போல் பிரகாசித்து - தீங்கற்ற
அறிவுச் சுடரை ஏற்றி வைக்கும்
ஞானச் சுடரே பல்லாண்டு வாழ்க! வாழ்க!
சந்நிதி ஐயனின் அருளால் வாழ்க.

தர்மலிங்கம் - தவநேசன்
உடுப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வம் சிவமயம்

# "ஆலய வழிபாடும் சமய - சமூகத் தொண்டுகளும்"

உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாததாகும். அது போல ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ் சோதிவடிவான எமது இறைவனை வணங்க உகந்த இடமே ஆலயம் ஆகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முது மொழி. நாம் விரும்பிய நன்மைகளையெல்லாம் இனிது அடைய வேண்டுமெனில் ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். மனத்தினை ஒரு வழிப்படுத்திக் கடவுளை உள்ளன்போடு நினைந்து தியானிக்க வேண்டும்.

தினசரி காலை மத்தியானம், இரவு மூன்று நேரமும் கடவுளின் நாமத்தை செபித்தும் பஜனைகள் - கூட்டுப்பிரார்த்தனைகள் பாடியும் பூசிக்க வேண்டும். கூடுதலாக இளம் சமுதாயத்தினர் தெய்வீக சிந்தனையுடன் "ஆலய வழிபாடும் - சமய சமூகத்தொண்டுகளும்" பணிகளும் செய்ய முன் வர வேண்டும்.

அர்ச்சனை செய்து விபூதிப்பிரசாதம் முதலியவற்றை வாங்கிக் கொண்டு வீடு செல்வதுதான் ஆலய வழிபாடாகக் கருதக்கூடாது. "எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க" என்று ஆலயக் கூட்டு வழிபாடுகளில் படிப்பது போல் "மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு" என நினைந்து நாம் அனைவரும் சமய - சமூகத் தொண்டுகளிலும் ஈடுபட வேண்டும். நாம் மற்றவர்களுக்குத் தொண்டு செய்யக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்த வேண்டும்.

"அன்பே சிவம்" என்பதை நாம் மனதார உணர வேண்டும். ஒருவன் அன்பை உணர்ந்து விட்டால் எல்லாம் உணர்ந்தவனாகிறான். "அ" என்பது - தமிழுக்கே முதல் எழுத்து "ன்" என்பது வரிசையின் கடைசி எழுத்து "பு" என்பது நடு எழுத்தாகும். முன்னாகிப் பின்னாகி நடுவாகி எங்கும் பரந்துள்ளது அன்பு என்னும் சொல் முந்திய முதல் நடு இறுதியுமானான் என்பதை நினைவூட்டுகின்றது. இறைவன் அன்பு வடிவமானவன்.

அன்பு பெற்றெடுத்த குழந்தையே அருளாகும். தன்னைப் போல் மற்றவர்களையும் நினைக்கத் தூண்டுவது அன்பாகும்.

சோம்பேறிப் பேச்சுப் பேசிப் பொழுதை வீணாக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கண்டு சமய சமூகப் பணியாற்ற அத்திவாரமானது அன்பே. இதனையே சுப்பிரமணிய பாரதியார்.

"அன்பென்று கொட்டுமுரசே மக்கள்
அத்தனை பேரும் நிகராம்"

என்றார். தமிழ்ப்பாட்டி ஔவையார் -

"ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்
நேசத்தால் நினைந்து கொள்" என்றார்.

இன்றைய நமது கவிஞன்

"கருணை நிறைந்த உள்ளம்
கடவுளர் வாழும் இல்லம்" என்றார்.

ஆகவே அன்பு, அருள் கருணை நிறைந்த உள்ளத்துடன் சமய - சமூகத் தொண்டாற்ற விரும்பாத சுயநலக்காரர்கள் ஆலயம் சென்று வணங்குவதால் பயனில்லை.

கடவுளுக்கு சாதி இல்லை. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று வேற்றுமை இல்லை. அன்பு உள்ளம் கொண்டு தொண்டாற்றியோர் அனைவரையும் "ஒன்றே குலம்" என மதித்து அருள் புரிந்தவர். திருவிளையாடற் புராணத்தில் இதற்குச் சான்றுகள் உண்டு.

நாம் ஆலயம் சென்று வணங்கினால் மட்டும் போதாது. ஆலயங்களில் எம்மால் செய்யக் கூடிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகைத் தொண்டுகளையும் செய்வது சாலச்சிறந்ததாகும். பெரியோர்களும், நாயன்மார்களும் சிவத்தொண்டு செய்து இறைவன் அடி சேர்ந்தார்கள். நாமும் இவர்களைப் போல் தொண்டுகள் செய்து அவர்களின் வழியில் நடைபயில முயலுவோமாக. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதற்கிணங்க சிவத்தொண்டு புரிந்து இறைவனடி சேர்வோமாக.

"சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை"

"தேச சேவையே தெய்வத் தொண்டு"
"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

"சமூகமணி" சி. சி. வரதராசா
சமாதான நீதிபதி
கௌரவ பொதுச்செயலாளர்.
யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை

★ முகஸ்துதிக்காரனை ஒருபோதும் நம்பாதே. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# சேவடி படரும் செம்மல் உள்ளம்

“சேவடி படரும் செம்மலுள்ளமொடு நலம் புரி கொள்கைப் புலம் பிரிந்து உறையும் செலவு நீ நயந்தனை ஆயின் ......”

இந்த வரிகளுக்கு உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் உரை வகுக்குங்கால் பின்வருமாறு வரைவார்.

“மெய்ஞ்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டுத் தங்கும் திருவடி. அத்திருவடியிற் செலுத்துதற்குக் காரணமான நல்வினைகளைப் பல பிறப்புக்களிலும் விரும்பிய திகழ்ந்தின கோட்பாட்டாலே தலைமையினை உடைத்தாகிய உள்ளத்தோடே செல்லுஞ்செலவை நீ விரும்பியே விட்டாயாயின்” என அமையும்.

சேவடி — முருகப்பெருமானுடைய திருவடி. அது ஞான பாதபங்கயம். மெய்ஞ்ஞானத்தால் அத்திருவடி அறிதற்கு அரியது. உணர்வரிய மெய்ஞ்ஞானத்தால் உணரப் பெறுவது. திருவடி ஞானம் நுண்மையான கருவிகளாலும் அளந்தறிந்து அகப்படாத நொய்மையான மெய்மையானது. மோப்பத்தாலும் அளக்கொணாதது. நோக்கிற்கும் நுண்ணியது.

நுணுக்கரிய நுண்ணுணர்விற்கும் அகப்படாதாயினும் அச்சேவடி நிகரற்ற வலிமையுடையது. தன்னைச் சரண் அடைந்தவர்களுடைய சிறுமையை நீக்க வல்லது. அவர்களைச் சார்ந்த அறியாமையை உடைக்க வல்லது. இன்னருள் சுரந்து வாழ்வாய வாழ்வு வழங்க வல்லது.

சிறுமையைப் போக்கவும் அறியாமையை நீக்கவும் என்றும் இன்பம் பெருகிக் காக்கவும் வல்லதானதால் செவ்வேள் பெருமானுடைய தண்மையும் செம்மையும் அமைந்த சரணம் — ‘நோன் தாள்’ என்று அறிந்தோர் அகமகிழ்வர்.

“உறுநர் தாங்கிய மதன் உடை நோன்றாள்” என்று மெய்ஞ்ஞானம் தலைப்பட்டவர்கள் ஏத்தி ஏத்தித் தொழுவார்கள்.

முன்னைய எத்தனையோ பிறவிகளில் அறிந்தோ அறியாமலோ தேடிச் சேகரித்து வைத்த பாவ புண்ணியங்களை அழிக்க வல்லது அச்சேவடி. இப்பிறவியிலும் மேலும் பல பிறப்புக்களுக்குக் காரணமான பாவ புண்ணிய வினை கட்டுவதற்கான சித்த விருத்தியைப் பரப்பது

★ குறைவாகப் பேசி நிறைய வாசித்தறி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதித்துச் சிதைக்க வல்லது செம்மலர் நோன்றாள். அழிவில் ஆரா இன்ப அன்பை அருளிய வண்ணம் ஆவது அச்சேவடி.

அறிந்தவர் யார் தான் அச்சேவடியை விரும்பமாட்டார்கள்.! விரும்பினால் மட்டும் மருந்தாகுமா?

கேட்டு அறிய ஒண்ணாதது. ஞான சாத்திரப் பனுவல்களால் பற்ற முடியாதது. மனத்தினால் எட்ட முடியாதது.

தேடுவது ஒன்றே சேவடியை அடைதற்கு வழி. தெருவு தோறும் ''செவ்வேள் பெருமானே! உன் திருவடிகள் எங்கே? எங்கே?'' என்று அலற வேண்டும்.

மணிவாசகப் பெருமானும், ''துணைஇலி பிணநெஞ்சே தேடுகின்றிலை, தெருவுதொறு அலறிலை.'' என்று திருவாசகத்தில் நெஞ்சிற்கு இடித்துரைத்தார்.

அப்பர் பெருமானும், ''.. ஆரூரா என்றென்றே அலறா நில்லே'' என்று அல்லவா நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார்.

''நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந் தேடித்திரிந்து சிவபெருமான் என்று பாடுமின்'' என்ற திருமூலர் திருவாக்கும் ஒரே கருத்தையே உணர்த்துகின்றது.

சேவடியைத் தேடித் தேடித் தெருவு தோறும் அலறுவதற்குப் பல பிறப்பில் புரிந்த புண்ணிய வசத்தினால் பண்பட்ட உள்ளம் அமைய வேண்டும். அதுதான் செம்மல் உள்ளம். செம்மல் உள்ளம் அமைவதற்கு அகபுறப் பற்றுக்கள் அகல வேண்டும். உள்ளத்தில் அன்புப்பெருக்கு ஊற்றெடுக்க வேண்டும். இறைவன் மாட்டுக் கொள்ளும் அந்த அன்பு தூய அன்பாகச் சுடர்விட்டுப் பரிமளிக்க வேண்டும். அது இன்ப அன்பு. அந்த நிலைக்கு கண்ணப்பன் அன்பு எனப்பெயர் சூட்டலாம்.

'அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக என்பரம் அல்லா இன்னருள்' எனும் மணிவாக்கும் அதுவே. அந்த உணர்வு அனுபவம் தான் தமிழில் பேசப்படும் அன்பு எனும் சொற்பொருள். உலகில் வேறு எம்மொழியும் அடைய முடியாத அன்பு எனும் சொற்பொருள் அது. சங்கம் வைத்து ஆராய்ந்த அகப்பொருள் இலக்கணத்தின் மூலம் அந்த அன்பே.

அந்த மேலான அன்பு தலைப்படாத வரையில் இறைஇன்ப அனுபவம் எய்தப் பெறாது.

---

★ வறுமையே நல்ல காரியத்துக்கு விளை நிலம். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வ புண்ணிய வசத்தால் அந்நிலைக்கு ஆளானால் ஆன்மா எப்பொழுதும் உலகவாழ்வில் தரித்திருக்கமாட்டாது. மூர்த்தி அவன் இருக்கும் எல்லையை அறியத் தலைப்பட்டுவிடும். பெற்றெடுத்த பிதா மாதாக்களைப் பேணாது உடன் பிறந்தார், சுற்றத்தார் அயலிடத்தாரைக் கருதாது தன்னையோ தன் நாமத்தையோ தரித்து நில்லாது தானில் தலை கூடலுக்குத் தலைப்பட்டுவிடும். நாவரசு பெருமானின், "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" திருப்பாட்டு உணர்த்துவதும் அத்தலையாய அன்பினையே.

என்னி லாரும் எனக்கினி யாரில்லை.

என்னி லும்பினி யானொரு வன்னுளான், என்று அப்பரடிகள் அருளுகின்றார். இந்த அன்பு தான் அந்த இனிமை

சிவபிரானிடத்தில் வைக்கும் அன்பே ஞானம் என்று சேக்கிழாரும் தெளிவுபடுத்தினார். "ஊனக்கண் எல்லைக்கிட்ட ஏடுநீர் எதிர்ந்து செல்லில் ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்."

ஞானநெறியில் தலைப்பட்ட நல்ல உள்ளம் முருகப்பெருமானுடைய சேவடியைத் தேடித் தேடி அலைந்து கொண்டிருக்கச் செவ்வேள் பெருமான் தரிப்பாரா?

நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல் காட்டமாட்டாரா?

நம் அருள் பெற்ற சீரடியான் மூலம் அன்பனை ஆற்றுப்படுத்துகின்றார்.

"நீ முற்பிறப்பிற் கருதிச்செய்த நல்வினையாலே வீடு பெறுவார்க்கு உரியனவாகக் கூறிய நற்குணங்கள் பலவும் சேர நன்றாகிய நெஞ்சத்திலுண்டாகிய இனிய வீடுபெற்றைத் தப்பாமல் இப்பொழுதே பெறுவை"

"பலவுடன், ஒன்னார் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப, இன்னே பெறுதி நீ முன்னிய வினையே" என்று ஆசீர்வதித்தார். நக்கீரர் சங்கப்புலவராதலின் சங்கத் தமிழில் பாடினார்.

சிவ. சண்முகவடிவேல்
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

அறியாமையில் இருந்து கேடு விளைகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராந் திருமுறை

# ஐயாறு வாயால் அழை

பதினோராந் திருமுறை ஒரு தொகுப்பு நூலாகும். இத் தொகுப்பில் பன்னிரண்டு பேர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் இடம் பெற்றுள்ளன. திருவாலவாயுடையார் ஆகிய மதுரை சோமசுந்தரப் பெருமான் பாடியருளிய பாடலும் இத் தொகுப்பில் இடம் பெறுவது இதன் சிறப்பு அம்சமாகும். பக்தி இயக்கத்தின் முன்னோடியாக இருந்தவரும் திருமுறை பாடியவர்களில் ஒரேயொரு பெண்மணி ஆகவும் திகழ்கின்ற காரைக் காலம்மையார் பாடியருளிய பாடல்களும் இத் தொகுப்பில் அடங்குகின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றாகவும் பத்துப் பாட்டில் முதலாவது நூலாகவும் போற்றப்படுகின்ற திருமுருகாற்றுப்படையை அருளிய



நக்கீரர் பெருமானின் பாடல்களும் இத்திருமுறையில் வருகின்றன. உலகியல் வாழ்வை முற்றாகத் துறந்து பூரண துறவியாக வாழ்ந்த பட்டினத்தடிகளின் பாடல்களும் இத்திருமுறையில் வருகின்றன. இராஜராஜ சோழனின் வேண்டுகோளுக்கிணங்க திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியின் பாடல்களோடு அரசர்களாக இருந்த ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோருடைய பாடல் களும், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள் ஆகியோரின் பாடல்களும் பதினோராம் திருமுறையில் இடம்பெறுகின்றன. இவர்களில் காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான்பெருமாள் நாயனார் ஆகிய மூவரும் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராண அடியார்களில் அடங்குகிறார்கள்.

மதுரையில் கோயில் கொண்டருளி இருக்கும் சோமசுந்தரப் பெருமானின் ஆலயத்தில் இசைப் பணிபுரிந்து வந்த பாணபத்திரர் என்னும் அடியாருடைய வறுமையைப் போக்கி அருளுமாறு சேரமான் பெருமாள் நாயனாருக்கு ஆலவாயான் எழுதிய கடிதமே திருமுகப்பாசுரம் ஆகும்.

மற்றவரை மகிழ்வித்தால் நீ மகிழ்ச்சி அடைவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் முதல் நான்கு அடிகள் இறைவனைப் பாடியருளிய சிவபெருமானின் சிறப்பையும், அடுத்த நான்கு அடிகளும் இவ்வோலை பாடப்பெறும் சேரமான் பெருமானின் சிறப்பையும், இறுதியில் உள்ள நான்கு வரிகளும் பாணபத்திரரின் சிறப்பையும் அவருக்கும் பொன்னளித்திடுமாறு கூறும் செய்தியையும் குறிப்பிடுகிறது.

சிவனை மறவாச் சிந்தையாளராகவும், பக்தி இயக்கத்தின் முன்னோடியாகவும் காரைக்கால் அம்மையார் திகழ்ந்தார். இவர் சிவனுடைய உருவத் திருக்கோலயில் ஈடுபாடு கொண்டு அந்தத் திரு அழகின் சிறப்பை பல பாடல்களில் பாடியுள்ளார். இவர் பாடியருளிய பாடல்கள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பனவாகும். சிவனடிப்பாட்டில் ஈடுபடுவதையும், சிவனடியார்களை ஆதரிப்பதையும் இவர் தனது வாழ்க்கைப் பணியாகக் கொண்டு வாழ்ந்தார். இவருடைய பிள்ளைத் திருநாமம் புனிதவதியார் ஆகும். பரமதத்தன் என்னும் வணிகப் பெருமகனுக்கு வாழ்க்கைப் பட்டு வாழ்ந்த காலத்தில் அவன் இவரிடம் கண்ட தெய்வத் தன்மையைக் கருதி இவரை விட்டு விலகி வேறோரிடத்தில் மணம் செய்து பெற்ற பெண் பிள்ளைக்கு புனிதவதியாரின் பெயரையே இட்டு வாழ்ந்தான். அம்மையாரின் உறவினர்கள் இவரை பரமதத்தனிடம் சேர்க்க முயன்ற போது அவன் தனது புதிய மனைவி பிள்ளை சகிதம் தானும் அம்மையாரை வணங்கியதுடன் வந்த உறவினர்களையும் வணங்கும்படி கூறினான்.

பரமதத்தனின் செய்கையைக் கண்டதும் காரைக்காலம்மையார் அவனுக்காகத் தாங்கிய இந்தப் பூதவுடலை நீக்கிப் பேயுருவம் தருமாறு இறைவனிடம் வேண்டினார். காரைக்காலம்மையார் இவ்வாறு வேண்டி நின்றதை பெரியபுராணம் பின்வருமாறு சித்தரிக்கிறது.

ஈங்கிவன் குறித்த கொள்கை இது; இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங்குன்பால்
ஆங்கு நின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர்தாள் பரவி நின்றார்.

அம்மையார் பேயுருவம் பெற்று ஞானம் கைவரப் பெற்ற பின்பு பாடிய முதற்பதிகம் அற்புதத் திருவந்தாதி ஆகும். அம்மையார் தாம் பெற்ற மெய்யறிவினை உலகத்தாருக்கு இப்பாடலின் ஊடாக காட்டியுள்ளார். இறைவனின் அருட் கோலங்களையும் திருவருட் செயல்களையும் இப் பாடல்களில் விளக்குகிறார். இறைவனின் திருவடியே தஞ்சம் எனவும், அதுவே பிறவித் துன்பத்தை நீக்கும் எனவும் கூறி இறைவன் செய்த பெரும் செயல்களைத் தனது பாடலிலே பாடுவார். பயன்

எதுவும் கருதாது தாம் இறைவனை வணங்கி வந்ததாகவும் கூறுவார். இவருடைய பக்தி நிலையின் உயர்வை பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

இடர்களையாரேனும் எமக்கிரங்காரேனும்
படரும் நெறி பணியாரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடு மெம்மானார்க்
கன்பறா தென்னெஞ்சவருக்கு.

சிவபெருமான் திருவாலங்காட்டில் பேய்கள் மத்தியில் அண்டமுற நிமிர்ந்தாடும் சிறப்பை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் விளக்கிக் கூறுகிறது. இறைவனைப் போற்றினால் பிறவித் துயர் நீங்கும். இறைவனின் திருவடியின்பம் கிடைக்கும் என்பதையும் திருவைந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பையும் திருவிரட்டை மணிமாலை விளக்குகிறது.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகப் போற்றப்படும் ஐயடிகள் காடவர்கோன் பல்லவ அரசராகிய பரமேஸ்வரவர்மன் எனச் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்ட இவர் பரமேச்சுர மங்கலம் எனப் பெயரிடப்பெற்ற ஊரில் சிவாலயம் அமைத்து அதற்கு வித்தியாவினீத பல்லவனீச்சரம் எனப்பெயரிட்டார். பரமேச்சுரர் மங்கலம் என்னும் ஊரை அந்தணர்களுக்கும் கோயிற் காரியம் செய்வோருக்கும் வழங்கினார். இவர் தமது மைந்தன் நரசிங்கவர்மனிடம் அரசியலை ஒப்படைத்து விட்டு சிவாலய யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு வெண்பா பாடி வந்தார். சிதம்பரத்தில் நீண்ட காலம் தங்கியிருந்து நடராஜப் பெருமானை வணங்கினார். ஐயடிகள் காடவர் கோனின் ஆட்சிச்சிறப்பை ''வெய்ய கலியும் பகையும் மிகையொழியும் வகை அடக்கி அரசளிப்பார்'' எனப் பெரிய புராணம் போற்றுகிறது.

இருபத்து நான்கு வெண்பாக்களைக் கொண்ட தோத்திரத் திருவெண்பாப்பாடல்கள் இருபத்திரண்டு தலங்கள் மீது பாடப்பெற்றுள்ளன. பாராளும் பெருமையிலும் பார்க்க பரமசிவனுக்குத் தொண்டனாய் ஓடு ஏந்தி இரந்து உண்பது சிறப்பானது எனக் கூறுவார். இவரை நெற்றிக் கண்ணுடைய சிவனுக்கு ஒப்பாக கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இவர் சிவன் கோயில்கள் தோறும் ஒவ்வொரு வெண்பா பாடினார் என நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுகிறார். இவர் திருக்கோயில்களில் வேதம் ஓதவும், திருமுறைகள் ஓதவும் நில மானியம் வழங்கினார் என்றும் கூறப்படுகிறது

முதுமையும் நோயும் வந்து உடம்பை நலிவு செய்யும் முன்பே இளமை நலத்தோடு இருக்கும் போதே இறைவழிபாடு செய்தல் வேண்டும் என்று வற்புறுத்துவார். திருவையாறு பெருமானை வாழ்த்தி வணங்க வேண்டும் என்று நெஞ்சுக்கு கட்டளை இடுகிறார்.

---

கஷ்டங்கள் எம்மைச் சுத்திகரிக்கின்றன

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி — வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை.

சேரநாட்டில் திருவஞ்சைக் களம் என்னும் தலத்தில் பெருமாக் கோதையார் என்னும் திருநாமத்தோடு சிவப்பணி புரிந்த அரச குலத் தலைமைச் சேர்ந்தவரே சேரமான் பெருமான் ஆவார். இவர் மண் பூத்த உடம்பினரான சலவைத்தொழிலாளி ஒருவனை திருநீறு பூசிய அடியவன் எனக் கண்டு வீழ்ந்து வணங்கினார். அரசன் வணங்குவதைக் கண்ட அவன் அஞ்சி ஒடுங்கி நின்றான். உம்முடைய வேடம் திருநீற்றுடைய சிவனடியாரையும் நினைப்பித்தது. ஆகையால் நீர் வருந்த வேண்டியது இல்லை என அரசர் கூறுவதை

"அடிச்சேரன் அடியேன்! என்றும் திருநீற்றின்
வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாது ஏகும்"

என்று பெரியபுராணம் சித்தரிக்கிறது. சேக்கிழார் காட்டும் அரசர்கள் அரச பணியில் நின்றாலும் பக்தர்களாக இருந்தார்கள். பக்தர்கள் நாட்டை ஆட்சி செய்த காலத்தில் சைவநீதி அங்கே மிளிர்ந்தது. சேரமான் பெருமான் நாயனார் நாள்தோறும் சிவபூசை செய்யும் வழமை உடையவராகத் திகழ்ந்தார். இவருடைய பூசையின் முடிவில் நடராசரின் திருச்சிலம்போசை கேட்பது வழக்கம் ஆகும். சிலம்போசை கேட்கத் தாமதித்த காரணத்தினால் ஆடவல்லானாகிய நடராஜன் மீது பொன்வண்ணத் தந்தாதி பாடினார். திருவாரூரில் மும்மணிக்கோவை என்னும் பிரபந்தத்தை பாடினார். சேரமான் பெருமான் சுந்தரரின் நண்பராவார். இவர் திருக்கைலாயம் சென்று ஞான உலா என்னும் பிரபந்தம் பாடித் துதித்தார்.

பொன்வண்ணத்தந்தாதி நூறு பாடல்களை உடையது. இவருடைய பாடல்களில் இவரின் சிவபக்தி தெளிவாகத் தெரிகிறது. திருத்தொண்டில் இவருக்கிருந்த ஈடுபாட்டை இவருடைய பாடல் தெளிவாக விளக்குகிறது.

சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் செப்ப நா அமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத்தேன் தொழக்கையமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்தேன் மெய்அரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு இவையான் விதித்தனவே.

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை)

எவரையும் மனம் நோகப் பேசாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவியரின் தன்மை !

ஒரு காலத்தில் ஓர் இளம் சந்நியாசி வாழ்ந்து வந்தார்.

ஆரவாரமும் ஆடம்பரமும் அந்தச் சந்நியாசிக்கு அறவே பிடிக்காதவை. ஏனென்றால், ஒருவன் இவற்றினால் கடவுளை அடையவே முடியாது என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். உலகப்பற்றுள்ள மக்களுடன் பழக நேர்ந்தபோதெல்லாம், எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு மட்டுமே குறைவாக அவர் பழகினார். வீணான உலக விவகாரங்களில் தலையிடுவதை அவர் அறவே தவிர்த்து வாழ்ந்தார்.

அதற்கு ஒரு காரணம் இருந்தது அதாவது கடவுளை நினைத்து வாழ்வதைவிட, எவ்வளவுதான் புகழையும் பணத்தையும் தருவதாக இருந்தாலும், எவ்வளவு பெரிய மனிதர்களின் பழக்கமானாலும், அவ்வளவு முயற்சியும் வீண், வீண், வீண்! இதை அவர் புரிந்து கொண்டிருந்தார். ஆகவே, எளிமையும் தெய்வ பக்தியும் கூடிய ஒரு சந்நியாசியின் வாழ்க்கையாக தமது வாழ்வை அவர் அமைத்துக் கொண்டார்.

அவர் தம்முடைய பிரார்த்தனையின் போது, உலகிலுள்ள எல்லா உயிர்களும் நலமாக வாழவேண்டும் என்று பிரார்த்திப்பது வழக்கம். ஆனால் நேரிடையாக அவர் மக்களுடன் அதிகம் பழகாமல் ஒரு மலைச்சாரலில் ஒதுங்கியே வாழ்ந்தார்.

மலைச்சாரலில் தங்கிக் கடுமையான ஆத்மசாதனங்களை அவர் பழகினார். தனிமையிலிருந்து ஆண்டவனைப் பிரார்த்திப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

நாளடைவில் அவர் முதிர்ச்சியைப் பெற்று ஒரு மகானின் நிலையை அடைந்தார்.

ஒரு சாதாரண மனிதர் இந்த அளவுக்கு ஞானமுதிர்ச்சியைப் பெற்றிருக்கிறார் என்பது தேவர்களுக்கு தெரிய வந்தது. அது அவர்களுக்கே ஆச்சரியத்தைத் தந்தது. அதுமட்டும் இல்லாமல், 'அந்த மகானை நாமும் நேரில் சென்று பார்க்க வேண்டும். அவருக்குச் சில அபூர்வமான சித்திகளைத் தரவேண்டும்' என்றும் தேவர்கள் விரும்பினார்கள்.

★ சினம் போல் பகைவர் இவ்வுலகில் இல்லை ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே ஒருநாள் தேவர்கள் அனைவரும் தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்தார்கள். அந்தச் சந்நியாசி தங்கியிருந்த மலைச் சாரலை அடைந்தார்கள்.

மகான் தேவர்களை அன்புடன் வரவேற்றார். தேவர்களுக்கும் அவரைப் பார்த்ததில் எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. தேவர்கள், "பெரியவரே! உங்களுடைய பரிசுத்தமான வாழ்க்கையை மனமார நாங்கள் பாராட்டுகிறோம். உங்களுக்கு அபூர்வமான சில சித்திகளைத் தர விரும்புகிறோம். உங்களுக்கு எப்படிப்பட்ட சித்திகள் வேண்டும் என்று சொல்லுங்கள். நாங்கள் அவற்றை மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தரக் காத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அந்தச் சந்நியாசி காது கேட்காதவரைப்போல இருந்தார். அவர் பதிலே பேசவில்லை. மௌனமாக மட்டுமே இருந்தார்.

தேவலோகத்திலிருந்து சந்நியாசியைப் பார்க்க வந்தவர்கள், அவர் சும்மா இருக்கிறார் என்பதற்காக அவரை விட்டுவிடுவார்களா?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள், "பெரியவரே, நோயாளிகளை நீங்கள் தொட்ட மாத்திரத்திலேயே குணப்படுத்தும் சித்தியை உங்களுக்குத் தரட்டுமா? அதைக்கொண்டு உலகமக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்யலாம்" என்று சொன்னார்கள்.

அதற்குப் புன்முறுவல் பூத்தபடி சந்நியாசி பதில் சொன்னார். "நீங்கள் என்மீது கொண்டுள்ள அன்புக்கு மிகுந்த நன்றி. ஆனால் எனக்குச் சித்தி எதுவும் வேண்டவே வேண்டாம். அப்படி சித்தி என்ற ஒன்றை எனக்குக் கொடுத்து என்மீது சுமையை ஏற்றிவிடாதீர்கள். எந்தப் பகவான் உலகிலுள்ள ஜீவராசிகளையும் மக்களையும் படைத்தாரோ, அவரே நோயாளிகளைக் குணப்படுத்தும் பணியையும் கவனித்துக் கொள்வார் அவரே அதைச் செய்யட்டும்"

ஆகவே திரும்பவும் அவர்கள், "நீங்கள் ஒரேயடியாக அப்படிச் சொல்லக் கூடாது. பாவம் செய்த மக்களைப் புனித வாழ்க்கையை மேற்கொள்ளச் செய்யும் சித்தியை உங்களுக்குத் தருகிறோம். தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சந்நியாசியிடம் சொன்னார்கள்.

"வேண்டாம், சித்தி எதுவாக இருந்தாலும், அது தயவு செய்வது ஆகாது. மேலும், நீங்கள் குறிப்பிடும் வேலையைத் தேவர்களாகிய நீங்கள் தான் செய்து வருகிறீர்களே! எனக்கு அந்தச் சித்தி வேண்டாம். எனக்கு அதைப் பெறும் விருப்பம் இல்லை" என்று தீர்மானமாக அவர் பதில் சொல்லிவிட்டார்.

"உலகம் முழுவதும் உங்களைப் போற்றிப் புகழும்படி செய்கிறோம். அதையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று தேவர்கள் மீண்டும் தெரிவித்துக் கொண்டார்கள்.

சந்நியாசி அதற்கும் சம்மதிக்கவில்லை. "வேண்டாம்; என்னை விட்டு விடுங்கள். சித்திகள் தரும் விஷயத்தில் என்னைக் கட்டாயப் படுத்தாதீர்கள். நீங்கள் சொல்வதைப்போல மக்கள் என்மீது ஈடுபாடு கொண்டு போற்றிப் புகழ ஆரம்பித்தால், யாரை நினைப்பதற்காக மனித வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறதோ அந்தக் கடவுளையே மறந்து போய் விடுவார்கள். அதைவிடவும் பெரிய தீமை உலகிலேயே கிடையாது. என்னை அந்த நிலையில் வைத்துவிடாதீர்கள் என்று மன்றாடி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

இதைக் கேட்ட தேவர்கள் அனைவருமே, "பிறகு உங்களுக்கு என்ன தான் வேண்டும் என்று நீங்கள் சொல்லுங்கள்" என்று ஒரே குரலில் கூறினார்கள்.

★ உண்மை பேசுதல் ஞான வாழ்வின் ஆரம்பம் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நியாசி ஒரு குழந்தையைப் போலச் சிரித்துக் கொண்டே, "அது தான் எனக்கும் தெரியவில்லை" என்று சொன்னார். ஆனால் அவருடைய குரலில் இருந்த உறுதியும் தீர்மானமும் தொனித்தன.

தேவர்கள் விட்டு விடுவதாக இல்லை. "எங்களுடைய மகிழ்ச்சிக்காகிலும் எதையாவது கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்போது தான் எங்களுக்குத் திருப்தி ஏற்படும்" என்று மன்றாடுவதைப் போலச் சந்நியாசியிடம் வேண்டினார்கள்.

"சரி. அப்படியானால் இடைவிடாமல் சதாசர்வகாலமும் கடவுளின் கிருபை எனக்குக் கிடைக்க அருள் செய்யுங்கள். வாழ்க்கையில் எனக்கு அது ஒன்று மட்டும் இருந்தால் போதும்" என்று துறவி பணிவாகக் கேட்டுக் கொண்டார்.

சந்நியாசியின் பணிவையும் வைராக்கியத்தையும் கண்ட தேவர்களுக்கு வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன.

அவர்கள், "கடவுளின் கிருபையைத்தான் நீங்கள் ஏற்கனவே தாராளமாக ஏன், பரிபூரணமாகவே பெற்றிருக்கிறீர்களே! எங்களுக்காக வேறு ஏதாவது ஒரு சித்தியைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இது எங்கள் பிரார்த்தனை" என்று ஏகோபித்த குரலில் அனைவருமாகச் சேர்ந்து சொன்னார்கள். அவர்களுடைய குரலே தெய்வத்தின் சந்நிதியில் பிரார்த்திப்பது போலவும் யாசிப்பது போலவும் இருந்தது.

முனிவர் சில விநாடிகள் யோசித்தார். "சரி, எனக்கே தெரியாமல் நான் உலக மக்களுக்கு நன்மைகளைச் செய்யும்படி செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

தேவர்கள், சந்நியாசி இருந்த இடத்திலிருந்து சற்றுத் தூரம் ஒதுங்கிச் சென்று தங்களுக்குள்ளாகவே ஒன்றுகூடி ஆலோசித்தார்கள். ரிஷியின் பணிவுக்கு ஏற்பவும், அவரது உள்ளத்தைப் புண்படுத்தாமலும் அவருக்கு ஒரு வரம் தர முடிவு செய்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு சித்தி தரப்போவதைச் சந்நியாசிக்கே தெரிவிக்காமல் இருப்பது என்று அவர்கள் முடிவு செய்து கொண்டார்கள்.

பிறகு சந்நியாசியின் முன்னிலையில் தேவர்கள் திரும்பி வந்து, "இந்த நிமிடம் முதற்கொண்டு உங்களுடைய நிழல்பட்ட மாத்திரத்தில் பிணி நோய் துன்பம், பாவம் இவை யாவும் பறந்தோடி விடுவதாகுக! ஆனால் இப்படி ஒரு சித்தியை நீங்கள் பெற்றிருப்பது உங்களுக்கே தெரியாமல் இருப்பதாகுக" என்று மனதால் நினைத்தார்கள்.

செருக்கைப் போல் தீமை எதுவும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு, தேவர்கள் அனைவரும் மகரிஷியிடம் விடைபெற்றுக் கொண்டு தேவலோகம் திரும்பினார்கள். தேவர்கள் தமக்குக் கொடுத்துச் சென்ற சித்தியைப் பற்றி மகரிஷிக்கு ஒன்றுமே தெரியாது.

அதன் பிறகு அந்தச் சந்நியாசி நடந்து சென்ற இடமெல்லாம் அவர் நிழல்பட்ட மாத்திரத்திலேயே காய்ந்த செடி கொடிகள் தளிர்த்தன. வறண்ட நீரூற்றுக்கள் சுரக்க ஆரம்பித்தன. தரிசு நிலங்கள் செழித்தன துன்புற்றவர்கள் மன அமைதி பெற்றார்கள். நோயாளிகள் தங்களை வருத்தும் பிணி நீங்கிக் குணம் அடைந்தார்கள். இவ்விதம் அவரது தவத்தின் மகிமை விரும்பத்தக்க பல நல்ல மாற்றங்களை உண்டு பண்ணியது.

ஆனால் இத்தகைய மாறுதல்கள், தேவர்கள் தமக்குத் தந்த சித்தி காரணமாகத்தான் ஏற்படுகின்றன என்பது அந்தச் சந்நியாசிக்குத் தெரியவே தெரியாது. மாறுதல்கள் நிகழ்வதைத் தமது கண் முன்னாலேயே அவர் பார்க்க நேர்ந்த போதும், அவற்றை அவர் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் கவனிக்காதவரைப் போலவே இருந்து வந்தார்.

அவர் எப்போதும் போலவே மக்களுடன் பேசாமல் வீதியில் செல்வார். அவராக எதுவும் பேசமாட்டார். ஆனால் மக்கள் அபூர்வமாக தாமாக முன்வந்து ஏதாவது கேட்டால், அன்பு ததும்ப அவர்களுக்குப் பதில் சொல்லுவார். மக்களும் அவரிடம், அவருக்குச் சித்தி இருப்பதைப் பற்றிச் சொன்னது கிடையாது.

தண்ணொளி பரப்பும் நிலவு போலவும், நறுமணம் கமழும் மலர் போலவும், கைம்மாறு கருதாத மேகம் போலவும் பூவுலகில் வாழும் பரமஹம்சர் ஒருவரின் வாழ்க்கையாக அவரது வாழ்க்கை அமைந்தது. அவரைப் பார்த்தபோதும் நினைத்த போதும் மக்கள் அவரை மனதிற்குள்ளாகவே போற்றித் துதித்தார்கள். அவரோ எளிமையும், அமைதியும் கூடிய தமது வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

கதையில் சொல்லப்பட்ட சந்நியாசியின் வைராக்கியமும், வாழ்க்கை முறையும் பக்தி வாழ்க்கையில் ஈடுபடுபவர்களில் ஒரு சாராருக்கு நல்ல ஒரு படிப்பினையாக விளங்கும்.

தொகுப்பு: சந்நிதியான் ஆச்சிரமம்

★ துன்பம் எமது கண்களைத் திறக்கும் துணை ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகருக்கு யானைமுகம் எவ்வாறு வந்தது...?

ஒரு சமயம் குளிக்கச் சென்றார் பார்வதி. தனிமையாகக் குளித்துக் கொண்டிருந்ததால் காவலுக்காக மண்ணால் ஓர் ஆண் குழந்தையை வடித்துப் படியில் அமர்த்தினாள். பார்வதியைத் தேடிவந்த சிவபெருமானைக் கூட அனுமதிக்காத அந்தக் குழந்தைமீது கோபம் கொண்ட சிவன் அக் குழந்தையின் சிரசைத் துண்டித்து எறிந்து விட்டார்.

பார்வதி மனம் வருந்தியதைக்கண்ட அவளது சகோதரன் மகாவிஷ்ணு 'என்ன செய்தால் என் சகோதரியின் மகன் அவளுக்குக் கிடைப்பான்?' என்று யோசனை கேட்டார், வடதுருவமாய்த் தலையை வைத்துப் படுத்திருக்கும் காவிலங்கு யானை ஒன்றின் தலையை எடுத்து அந்தக் குழந்தைமீது பொருத்தினார் சிவபெருமான்.

பலமிருந்த குழந்தை ஒன்று படைக்கப்பட்டதால் வலிமை மிகுந்த கணங்களுக்கு அதிபதியாக அக்குழந்தை நியமிக்கப்பட்டு, 'கணபதி' (கணங்களுக்கு அதிபதி) என்று பெயர் வழங்கலாயிற்று.

யானைமுகம் கொண்ட கணபதியின் வடிவத்தைக் கூர்ந்து நோக்கினால் 'ஓம்' என்ற பிரணவ வடிவம் தெரியும்.

விநாயகரை நினைத்தே நாம் எக்காரியத்தையும் தொடங்குகின்றோம். எடுக்கும் எந்தக் காரியமும் தடங்கலின்றி இருக்க வேண்டும்! என்று ஆசைப்படுகின்றோம்.

தடங்கல்களை நீக்கி அருள்பாலிக்கும் விக்கினேஸ்வரரைத் தேடி அங்குமிங்கும் அலைய வேண்டாம்.

"பிடித்த இடத்திற் பிள்ளையார்!" என்பதற்கிணங்கச் சிறிது மஞ்சட்பொடி கொண்டோ அல்லது களி மண்ணாலேயோ சாணத்தினாலேயோ பிள்ளையாரைப் பிடித்து வைத்து, அறுகம்புல்லை மாலையாக அணிவித்து ஏதாவது பழத்தை நிவேதனம் செய்தாற்கூடப் போதும். கணபதி ஆனந்தமடைந்து விடுவார்.

தொகுப்பு:
திருமதி வசந்தா கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலு யுகங்களிலும் வாழ்ந்த மனிதர்கள் பற்றிய வரலாற்றையும் தெற்குப் பாகத்தில் அமைந்துள்ள கலியுகம் பற்றிய வரலாற்றையும்

புலிப்பாணி முனிவர் தன் பாக்களின் மூலம் பின்வருமாறு விளக்குகின்றார்

## தென்பாகம் (கலியுகம்)

5. பொய்யில்லை மேருவுக்குத் தெற்கே யையா
புங்கமுடன் மனிதருடை நிறத்தைக்கேளு
மையில்லா நிறமது தானந்த வண்ணம்
மைந்தனே யுயரமது முழந்தான் நாலு
செய்யில்லா வறுசுவையும் அனேக வர்க்கஞ்
செயலான வன்னமொடு சிரங்கை நீரும்
எய்யான பாலோடு கிழங்கு காய்கள்
இதமான அமிர்தமது கொள்வாருண்டோ.

6. உண்டான வனேகவித தெய்வமுண்டு
உத்தமனே சாத்திரங்க ளனேகமுண்டு
பண்பான பொய் கொலையுங் களவுமுண்டு
பண்பில்லா விசுவாசம் பாவமுண்டு
செண்டான முறைமை கெட்டு மையல் கொண்டு
செயலான பாக்கியமும் வறுமையுண்டு
கொண்டான வயதுதான் நூறென்பார்கள்
கொற்றவனே நிச்சயந்தானில்லைத் தானே.

7. தானென்ற கோயில்குள மாறுமுண்டு
தயவான புண்ணியமும் பாவமுண்டு
மானென்ற சித்தரென்றும் முனிவரென்றும்
மகிமையாந் தபோதனர்கள் பெரியோரென்றும்
கோனென்ற வரசரென்றுங் இருக்கனென்றுங்
கொடிதான பிரமிலி கடந்தோரென்றும்
வாடுகின்ற கிரகங்கள் நோய்க ளென்றும்
வகை வகையாய்ப் பலசாதி யனேகந்தானே.

எந்த நேரமும் இறைவனை நினைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தானான போகருடை கடாட்சத்தாலே
நாவாகப் புலிப்பாணி விளங்கச் செய்தேன்
வீணாக அவரவர்கள் செய்த கர்மம்
விளைந்து தொடர் நோய்போல வெள்ளங்கோடி
கோனாக வந்த கர்மந் தீரவேண்டி
குலமாகத் தான தருமஞ் செய்யவேண்டும்
தேனாகத் தர்மங்கள் செய்யாவிட்டால்
தேகமது நோயிட்ட பாண்டமாகும்.

பஞ்சாகமங்களில் ஒன்றாகிய ஆதி ஆகமம் 7ஆம் அதிகாரத்தில் சலங்கள் அப்பு மண்டலத்திற்குப் போய் அவ்விடத்திற் குடியிருப்பது அசாத்தியம் ஆனபடியால்தான் சலப்பிரளயம் வந்த பொழுது மனு என்பவர் அக்கினி மண்டலத்தையும் அப்பு மண்டலத்தையும் தாண்டி பிருதுவி மண்டலத்தை அடைந்தார்.

சலப்பிரளயத்தில் தப்பி ஓடிய மனு ஆதியாகமத்தில் கூறிய படி நோவா என்னும் வேறு பெயரினைக் கொண்டுள்ளார். குறிப்பிட்ட ஆகமத்தில் 7ஆம் அதிகாரத்தில் இச்சலப்பிரளயத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது. " சலப்பிரளயம் பூமியில் உண்டான போது நோவா அறுநூறு வயதுடையவனாக இருந்தான். சலப்பிரளயத்திலிருந்து தப்புவதற்கு நோவாவும் அவன் மனைவியும் அவன் குமாரரும் மனைவிமாரும் பேழைக்குள் பிரவேசித்தார்கள் "

ஏழு நாட்கள் சென்றபின்பு பூமியின் மேல் சலப்பிரளயம் உண்டாயிற்று அப்போது நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் அவ்வருடம் இரண்டாம் மாதம் பதினேழாந் திகதியாகிய அந்நாளிலே மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது. ... அப் பொழுது கர்த்தர் அவனைப் பேழைக்குள் விட்டுக் கதவை அடைத்தார். சலப்பிரளயம் பூமியின்மேல் உண்டானபோது சலம்பெருகிப் பேழையை எழும்பப் பண்ணிற்று. அது பூமிக்குமேல் மிதந்தது. சலம் பூமியின்மேல் பெருகியதனால் வானத்தின் கீழ் எங்கும் உள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன. மூடப்பட்ட மலைகளுக்கு மேலாகப் பதினைந்து முழ உயரத்துக்குச் சலம் பெருகிற்று அப்பொழுது மாமிச செந்துக்களாகிய பறவைகளும் நாட்டுமிருகங்களும் காட்டுமிருகங்களும் பூமியில் ஊரும் பிராணிகள் யாவும் எல்லா நரஜீவன்களும் பூமியின்மேல் சஞ்சரிப்பன யாவும் மாண்டு நிர்மூலமாயின. சுற்றில் நோவாவும் அவனோடு பேழை உள்ளிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம் பூமியின்மேல் நூற்றைம்பது நாள் பிரவாகித்துக் கொண்டிருந்தது. சலப்பிரளயத்திற்குப் பின்பு நோவா முன்நூற்றைம்பது வருடங்கள் வரையிலும் உயிரோடிருந்தான் நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருடங்களாகும். அப்போது பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரேவிதமான பேச்சும் இருந்ததாக ஆதியாகமத்தில் எழுதப்பட்டுள்ளதை வாசித்து, கவனத்திற்கு எடுத்துக்கொண்டு பின்வருவனவற்றைத் தொடர்ந்து வாசிக்கும்படி வாசகர்களை வேண்டுகின்றோம்.

மனு என்பவர் பிராமணராயிருந்தபடியால் அந்தயுகத்திற்குரிய வேதங்கள் உபநிடதங்கள் ஆயுள்வேத வைத்திய சாஸ்திரங்கள் முதலாய அரிய உபயோகமுள்ள நூலகளைச் சேகரித்துக் பாதுகாப்பாக வைத்திருந்தார். அவைகள் என்ன பாஷையில் எழுதப்பட்டிருந்தன என்பது நிச்சயமாகச் சொல்லப்படவில்லை உலகத்தின் பல பாஷைகளை ஆராய்ச்சி செய்வோர் சலப்பிரளயத்தின் முன் துராணியம் என்னும் பாஷையைப் பேசினார்களென அபிப்பிராயப்படுகிறார்கள். இது தற்காலம் மத்திய ஆசியாவின் மேற்பாகத்திலுள்ள சில சனங்களால் பேசப்படுகின்றதும் கித்துரானிய மென்னும் பெயரிலிருந்து துவாபரயுகத்தின் ஈற்றில் பேசப்பட்ட பாஷையென, இலகுவிற்கண்டுபிடித்துக் கொள்ளக் கூடியதாயிருக்கிறது. ஆனால் இப்பொழுது அவைகள் யாவும் சமஸ்கிருத பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல்கள் இந்துக்களிடத்தே பரம்பரையாக இருந்து வருகின்றன.

மேலும் மத்திஸ்ய புராணக்கூற்றுப்படி பின்வருமாறு.

உலகம் அழியப்போகிறது என்றும் ' நீதிமானாகிய அம்மன்னன் ஒரு நாவாயினை அமைத்து அதனுள்ளிருப்பின் தான் அவனைக் காப்பதாகவும் ஒரு சிறு மீன் கூறிற்று மன்னன் மீனைக் காத்துவர அது மிகப் பெரியதாக வளர்ந்து கடலினையடைந்தது. பின்பு சலப்பெருக்கு நேருதலும் மீன்தோன்றி மன்னனது நாவாயை இழுத்துச்சென்று இமயமலையிலே நௌபந்தனம் என்னும் சிகரத்தையடைந்தது இச்சத்திய விரதன் மறு பிறப்பிலே வைவச்சதன் மகனான மனுவானான் இது மத்ஸ்ய புராணக் கூற்றாகும்.

மனுவரசன் சோழகுலத்து மன்னன் எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. சத்தியந் தவறாத நேர்மை இக்குலத்தாருக்கு இயல்பாக அமைந்தது என்பதைச் சிபி, மனுநீதிகண்டசோழன் என்றின்னோர் வரலாற்றினால் அறிகின்றோம். இக்குலத்து மன்னன் சத்தியவிரதன் என்னும் சிறப்புப் பெயரையும் மனு என்னும் இயற்பெயரையும் உடையவனாக இருக்க வேண்டும். இவன் கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் காலத்தவனாக வேண்டும்.

[தொடரும்....

சிவம்

பணமில்லாத மனிதன் அம்பில்லாத வில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் கோபமும் சீதா கல்யாணமும்!

தட்சனின் மகளாக அவதரித்து, தாட்சாயினி என்ற நாமம் ஏற்ற அன்னை மலைமகள், மகேசுவரனை மணாளனாகப் பெற்றாள்.

மகேசுவரனே தனக்கு மருமகனாகி விட்டான் என்ற மன மயக்கத்தில் மதிகெட்டுப்போன தட்சன், சகலமும் வழங்கவும், மதிக்கவும் தவறினான். அவன் கொண்ட மமதையின் விளைவாக அம்பிகை சினம் கொண்டாள்; தான் கொண்ட சினத்தீயில் தன் உடலையே அழித்துக் கொண்டாள்.



கருணையின் இருப்பிடமான சர்வேஸ்வரன் மீது காரணமற்ற துவேஷத்தை வளர்த்துக் கொண்ட தட்சன் ஒரு யாகம் செய்தான். அந்த யாகத்திற்கு மகாதேவனுக்கு அழைப்பு அனுப்பாதது மட்டுமின்றி, வேத மந்திரங்களிலிருந்து சிவநாமங்களை அகற்றி, சிவநாமமே இல்லாத வேத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களை சில வருடங்களுக்கு, சில வேதியர்களை ஓதச்செய்யச் செய்து யாகத்தைத் தொடங்கினான். ஈசனை அவமதிக்க எண்ணியே இப்படி ஈசனோ, அன்றி ஈசனின் நாமாவளிகளோ இல்லாத ஒரு யாகத்தை நடத்தினான்.

தனது தந்தை தட்சன் நடத்தும் யாகத்தில் கலந்து கொள்ள விரும்பினாள் தேவி. ஆனால் ஈசனோ, ''தாட்சாயணி! உன் தந்தை என்னை அவமதிக்கும் விதத்தில் செய்யும் யாகத்தில் நீ கலந்து கொள்வதில் எனக்கு உடன்பாடு இல்லை'' என்றார். அதற்கு தேவி, ''ஐயனே! நான் என் தந்தையின் யாகத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பமுடன் செல்லவில்லை. மாறாகத் தங்களை அவமதிக்கும் செயலைச் செய்யும் என் தந்தையின் மமதையை அகற்றவே செல்கிறேன்'' என்றாள்.

''தேவி! அது உன்னால் முடியாது. காரணம் தட்சனின் அழிவு நெருங்கிவிட்டது'' என்றார் ஈசன்.

''சுவாமி! நான் எப்படியும் என் தந்தையின் செயலை மாற்றியே ஆகவேண்டும். தங்களை அவமதிக்கும் அவர், திருந்துவதுடன், தங்கள் தாள் பற்றி வணங்கச் செய்யவேண்டும். அவ்வாறு செய்ய இயலவில்லையென்றால், அவரால் வளர்க்கப் பெற்று, அதன் காரணமாக தாட்சாயணி என்ற பெயர்பெற்ற இந்தத்தேகத்தை யோகாக்னியில் தியாகம் செய்வேன். இது உறுதி ' என்று கூறிய அம்பிகை, ஈசனின் அனுமதி வேண்டி நின்றாள்.

''பிறந்த வீட்டுக்கு நீ வேண்டுமானால் அழைப்பே இல்லாமல் போகலாம். ஆனால் நான் வரத் தயாராக இல்லை'' என்று ஈசன் கூறிவிட்டார்.

ஈசன் இல்லாமல் அம்பாள் மட்டும் தனித்து யாகத்துக்குச் செல்வது முறையற்ற செயல் - கொண்ட கணவனை அவமதிக்கும் செயல் என்று நாம் சொல்ல முடியாது. தேவ தேவியரின் இத்தகைய திருவிளையாடல்களின் முடிவு ஒரு நல்ல செயல் நடந்திட மூலகாரணமாய் அமைந்து விடுகிறது. அப்படித்தான் ஈசனை விட்டுத் தனித்து தட்சனின் யாகத்திற்கு அம்பிகை சென்றதன் விளைவாகப் பின்னாளில் ஸ்ரீசீதாராம திருமணம் நடைபெற்றது.

தேவி யாகம் நடைபெறும் இடத்திற்குச் சென்றாள். அங்கே சர்வ உலகங்களையும் ஈன்ற அன்னையை வரவேற்போர் யாருமில்லை. தட்சனின் இடம் சென்ற தாட்சாயணி, ''தந்தையே! முழுமுதற் கடவுளான சர்வேஸ்வரனுக்கு அழைப்பு அனுப்பாதது மட்டுமல்லாமல் அவரது நாமாவளிகள் ஒன்றுகூட இல்லாத யாகத்தை நடத்துகிறீர்களே - இது முறைதானா? என்று கேட்டாள்.

★ சுயநலத்தினால் தான் மக்கள் துக்கப்படுகிறார்கள். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவத்தால் அறிவிழந்து போன தட்சன், "சர்வேஸ்வரனா? யார் சர்வேஸ்வரன்? சுடலையில் நடனமாடி, சாம்பலை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு, பித்தனைப் போல் திரிபவனா சர்வேஸ்வரன்? அவனை என் மருமகன் என்று சொல்வதே எனக்கு மகத்தான அவமானம்! என்று மகத்தான அழிவைத் தரப்போகும் மமதையுடன் கூறினான்.

சினம் கொண்ட தேவி, "தட்சனே! உன் அழிவுக்காலம் நெருங்கி விட்டது. மதிகெட்ட உனக்கு மகளாகப் பிறந்து, உன்னால் வளர்க்கப் பெற்ற என் உடலை, யோகாக்கினியில் தியாகம் செய்து கொள்கிறேன்" என்று கூறி அதேபோல் தன் மேனியை யோகாக்கினியில் தியாகம் செய்து விட்டாள்.

நாகாபரணம் அணிந்த நாதனுக்கு, நடந்தது முழுவதும் தெரிந்தது. கோபமுடன் தனது ஜடாமுடியைக் கிள்ளியெறிய, அதிலிருந்து தோன்றிய அகோரவீரபத்திர சுவாமி சிவகணங்களுடன் புயல்போல் கிளம்பி, தட்சனின் யாகசாலைக்குப் புறப்பட்டார்.

அகோரவீரபத்திர சுவாமியின் கடும் கோபத்திற்கு ஆளான தேவர்கள் பறந்தோடினர்.

யாகத்தை அழித்துச் சிதைத்த அகோரவீரபத்திரர் சிவதனுசை பாசிமுகக் கற்களால் ஆன யாகசாலையின் ஓரத்தில் சாற்றிவைத்துப்போல் வைத்தார். வில்லை அவ்விதம் சாற்றி வைத்துவிட்டுச் சென்ற அகோர வீரபத்திரர் சற்றைக்கெல்லாம் 'தடால்' என்ற சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். அவர் சாற்றிவைத்த வில்லானது, அச்சமயம் அங்கு வந்த ஸ்ரீமந்நாராயணன் மீது விழுந்துவிட, அதைத் தாங்கிய வண்ணம் நின்றிருந்த ஸ்ரீமந்நாராயணனைப் பார்த்துப் பதறிப்போனார். மகாவிஷ்ணுவை நோக்கி, "சுவாமி! சிவநிந்தனையைக் கூட மன்னித்து விடலாம் ஆனால் சிவபக்த சிரேஷ்டரான தங்கள் மீது சரிந்து விழும்படி வில்லை வைத்தது என் தவறு தயவுசெய்து என்னை மன்னித்தருளுங்கள்!" என்று வேண்டி நின்றார். ஆனால் மகாவிஷ்ணுவோ, "நான்தான் பார்த்து வந்திருக்க வேண்டும். 'வில் விழும்போது அதைப் பாராமல் நான் வந்ததுதான் தவறு நீங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை' என்று சொன்னார். அச்சமயம் அங்கு வந்த நாரதர் "நீங்கள் இருவருமே தவறு செய்யவில்லை. இந்த வில்தான் தவறு செய்தது. ஸ்ரீமகாவிஷ்ணுவின் மேல் இந்த வில்லாயுதம் விழுந்தது மாபெரும் தவறு. இந்த வில்லானது யாருக்குத் திருமணத் தந்ததோ, அவர் கையாலேயே உடைக்கப்பட்டு, இந்த வில் எதற்காகப் படைக்கப் பெற்றதோ அந்த காரியம் நிறைவேறும்!" என்று தீர்ப்பு வழங்கினார்.

---

★ பொய்மையை விட உண்மையை உயர்வாக மதிக்க வேண்டும். ★

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இந்த வில்லை ஜனகரின் முன்னோர்கள் பெற்று, பூஜையறையில் வைத்துப் பூஜித்து வந்தனர். ஜனகரும் இதை ஒரு பிரம்மாண்டமான, சக்கரம் வைத்த பெட்டியில் வைத்துப் பூஜித்து வந்தார்.

இந்த வில்லானது ஒரு பெறும் வீரனால்கூடத் தூக்கமுடியாத அளவிற்கு பளுவானதாகும். ஒருநாள் ஐந்து வயதே ஆன சீதை பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அப்படி அவள் விளையாடிக் கொண்டிருந்த போது, அந்தப் பந்து வில் வைக்கப்பட்டிருந்த பெட்டியினடியே போய்விட்டது. உடனே சீதை அருகிலிருந்த காவலர்களை ஏவல் செய்யாமல், தானே பெட்டியினருகில் போய், விளையாட்டாக இடக்கையால் பெட்டியைத் தூக்கி, வலக்கையால் அதனடியில் இருந்த பூப்பந்தை எடுத்துக் கொண்டாள். இதை நேரில் பார்த்த ஜனகரின் மனதில், 'இந்த வில்லை எவனொருவன் தனியாக எடுத்து வளைத்து நாணேற்றுகிறானோ அவனே சீதையை மணம்புரிந்து கொள்ள வேண்டும்' என்ற எண்ணம் தோன்றியது.

காலம் கடந்தது. மைதிலி மணப்பருவம் அடைந்தாள். ஜனகர் சீதையின் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தார். சுயம்வரத்தில் பங்குபெற, 'உறுவலி யானையை ஒத்தமேனியர் அறுபதினாயிரர் அளவில் ஆற்றலர்' எனப் போற்றத் தகுந்த பலர் கலந்து கொண்டனர். ஆயினும் அத்தகையோரில் ஒருவராலும் அந்த வில்லைத் தூக்கி நிறுத்தி நாணேற்ற முடியவில்லை.

அச்சமயம் விசுவாமித்திரருடன் அங்கு வந்தனர் ஸ்ரீராமரும், இலக்குமணனும் முனிவரின் கட்டளைப்படி சுயம்வரத்தில் பங்குபெற முன்வந்த ஸ்ரீராமர், அனைவரும் அதிசயிக்கும் வகையில், வில்லைத் தூக்கி நிறுத்தி நாணேற்றினார். அந்த நேரத்தில் தட்சயாகத்தின் போது 'அம்பிகை கோபமுற்றதும், அதன் பயனாய் விளைந்த சம்பவங்களும் நினைவு வந்தது போல் அந்த வில் ஸ்ரீராமரின் கரத்தில் தானாக ஒடிந்து, ஸ்ரீசீதா - ராம திருமணத்திற்கு வித்திட்டது.

**1992-ல் ஞானபூமியிலிருந்து**

---

ஒருவன் இறைவனிடம் சரண்புகுந்தால், தவிர்க்க முடியாத விதியின் கட்டளைகளும் அகற்றப் படுகின்றன... இத்தகைய மனிதனது தலை எழுத்தை விதியே தனது கரங்களால் துடைத்து விடுகின்றது.

- ஸ்ரீசாரதாதேவி

---

★ எல்லா விதமான செல்வங்களுக்கும் அறிவுதான் வேர். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

பக்த அடியார்களே இந்தப் பொய்யான மெய்யை நிலையானது என நினைத்துப் பலர் முக்கியமாக அதிக கவனத்துடன் பாதுகாக்கின்றனர். ஆனால் இந்த நவ வாசல் கோட்டையோ இறைவனால் கொடுக்கப்பட்ட பரிசுப்பொருள். இந்தப் பரிசுப்பொருளை பலவாறு இயக்கி நல்வழிப்படுத்தக் கட்டளைகள் கொடுத்தே ஆன்மா (உயிர்) கொடுக்கும்போதே அதற்குரிய காலக்கெடு விதித்தே கொடுக்கிறான். திரும்பப்பெறவேண்டிய காலம் வந்ததும் பெற்றுவிடுகின்றான். கடன் கொடுத்த காலத்தில் அவற்றை அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்து தீர்க்க வேண்டியவை தீர்த்து வாங்கவேண்டியவற்றை வாங்கியும் கொடுக்க வேண்டியவற்றைக் கொடுத்தும் முடிக்கும் நேரத்தில் சில சமயம் சந்தர்ப்ப சூழ்நிலையால் கூடக் கொடுத்தும் வாங்கியும் ஆசை இச்சை என்பன கூடிக்குறைந்தும் விடுவதுண்டு.

இக்காரணங்களால் மீண்டும் பிறக்கும்நிலை ஏற்படுகிறது. இதைக் கொண்டே, ஒரு மனிதன் ஏழுமுறை மனிதப்பிறப்பை எடுக்கும் நிலையை அடைகின்றான் என்றும் ஆறுவனைப்போல் எந்தவித மாற்றமுமின்றி ஏழுபேர் இருப்பார்கள் என்றும் ஆன்றோர் கூறுகிறார்கள். மனிதனுடைய வாழ்க்கை வட்டத்தில் பலவிதமான செயல்கள், குணங்கள் நடைபெறுகிறது. இவற்றை எல்லாம் படிப்படியாக செயல்படவைத்து நல்நிலையடையவேண்டியே அறிஞர்கள். அருளாளர்கள் முனிவர்கள், தபசிகள் ரிஷிகள் காலத்திற்குக் காலம் தோன்றி பல உபதேசங்கள், பாடல்கள், வரலாறுகள் தந்துள்ளனர், தருகின்றனர், தருவார்கள். அவற்றை நன்கு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஒருமுறை ஆழ்ந்து வாசித்தாலும் உண்மை நிலை புரியாது. ஒவ்வொருமுறையும் திரும்பத் திரும்ப வாசிக்கும் போது ஒவ்வொரு புதிய புதிய கருத்துக்கள், தத்துவங்கள் தோன்றும். பல கோணங்களில் பல விதமாக சிந்திக்க சிந்திக்க பல பல தத்துவங்கள் தோன்றும்.

மனித வாழ்க்கையில் ஆணவம், மீட்சி, ராஜதந்திரம், நம்பிக்கை அவநம்பிக்கை, நட்பு, அன்பு, காதல், பாசம், கற்பு, பணிவு, கடமை, குறுக்குவழி போன்ற பல வேறுபாடுடைய செயல்பாடுகள் தோன்றும். இவற்றின் தத்துவங்கள் பலாபலன்கள் அறிவதற்கு மகாபாரதம், இராமாயணம் போன்றவை உண்டு. எந்தக் கண்கொண்டு பார்க்கின்றோமோ அப்படித் தோற்றும். விரதங்களின் மகிமை, முனிவர்கள் அருளாளர்களின் மகிமை சக்திகூடப் புலப்படும்.

அசட்டை மனப்பான்மை அறிவை மழுங்கச் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதத்தை எடுத்தால் ஆரம்பம் தொடக்கம் முடிவுவரை ஒவ்வொருவருடைய செயல்பாடுகளும் புரியும். இதில் பிறவிக்குருடனான திருதராட்டினனான கணவனுக்காக தன்னையும் குருடாக உருவகித்து விரதம் அனுஷ்டித்தாள் காந்தாரி. சல்லியன், விதுரர், துரோணர், கர்ணன், சகுனி, துரியோதனன், தருமன், அர்ச்சுனன், வீமன், நகுலசகாதேவர்கள் குந்தி, பாஞ்சாலி, கண்ணன் இன்னும் பலர் அங்கம் வகிக்கிறார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் வேறுபட்ட சக்திக்கும் உரியவராகிறார்கள். அப்படியே இராமாயணத்திலும் தென்படுகிறது. தான்பெற்ற பிள்ளையைத் தனது மகன் என்று அறிந்தும் தனது மற்றப் பிள்ளைகளுக்கோ அல்லது மற்றவர்க்கோ வெளியில் கூற முடியாத நிலையில் பரிதவிக்கும் தாய் குந்தியின் பாசநிலை, தன்னுடைய உடன்பிறந்த சகோதரர்கள் என்று அறிந்தும் வெளிக்காட்டாது அவர்களுடன் நன்றிக்கடனுக்காக, செஞ்சோற்றுக் கடனுக்காக போர் செய்யும் நிலையில் உள்ள கர்ணன், தனது கணவனுக்காகத் தனது கண்களை மறைத்துக்கட்டி எதையும் எக்காரணம் கொண்டும் பார்ப்பதில்லை என்ற லட்சிய விரதம் பூண்ட காந்தாரி, அநியாயமான முறையில் யுத்தம் செய்யத் தொடங்கிய தனது சொந்த மக்களுக்கு ஆசீர்வாதம் வழங்க மறுத்து நீதியை நாடிநிற்கும் பெறாமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்த காந்தாரி தனது மக்கள் அனைவரையும் இழந்த நிலையில் மூத்தமகனாகிய துரியோதனனை அழைத்து மகனே நீராடியபின் நிர்வாணமாக ஆடை எதுவும் அணியாது வரும்படி ஆணையிட்டாள். இந்த வயதில் எப்படி நிர்வாணமாக வரமுடியும் என்று கேட்க என்றும் நீ எனது குழந்தையே அதனால் வெட்கப்படாது வரும்படி கூறினாள். தாயாரின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு நிர்வாணமாகப் புறப்பட்டபோது ஞானதிருஷ்டியால் யாவற்றையும் அறிந்த கண்ணன் காந்தாரியின் கண்ணின் காந்த சக்தியால் துரியோதனனுக்கு கவசம் ஏற்பட்டால், பாரதப் போர் முடிவுறாத நிலை, வீமனின் சபதம் நிறைவேற முடியாத நிலை, உருவாகிவிடும் என்பதால் இவற்றைத் தடுக்கும் பொருட்டு கண்ணன் துரியோதனன் முன் தோன்றி வெட்கமில்லையா? தாய் என்றாலும் இந்த வயதில் நிர்வாணமாகச் செல்வதா? எனக்கூறி ஆடைதானே அணியக்கூடாது, ஆகவே வாழை இலைமடல் போன்றவற்றினால் மறைத்துச் செல் என்ற கூற்றுக்கமைய வெட்கத்திற்கு அஞ்சி வாழையிலையினால் மறைத்துச் சென்று தங்கள் கட்டளைப்படி யாவும் முடித்து வந்துள்ளேன் என்றான். இற்றைவரை எதையும் பார்ப்பதில்லை என்ற விரதம் பூண்ட காந்தாரி தனது கண்களை மறைத்துக்கட்டிய கட்டுக்களை அவிழ்த்து மகனை உச்சியிலிருந்து படிப்படியாக கீழே பார்வையைச் செலுத்தினாள். அவளின் விசுவாசம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைராக்கியம் கொண்ட விரதத்தின் பயனாக அபாரசக்தியை அடைந்த கண்களின் பார்வையால் எவராலும் எதுவும் செய்யமுடியாத கவசம் ஏற்பட்டது. விதிவசத்தால் அவரின் பார்வை (உடலின் ஒரு பகுதி) மறைக்கப்பட்ட பகுதிக்கு கவசம் அளிக்க முடியவில்லை. இதன் காரணமாக நடைபெற்றபோரில் அவ்விடத்தில்தான் வீமன் கதாயுதத்தால் தாக்கிக் கொல்கிறான். இதிலிருந்து உண்மையான விரதம் அனுஷ்டித்தால் அபாரசக்தியைப் பெறமுடியும் என்பது புலப்படுகிறது. இதனால்தான் முனிவர்கள், தபஸிகள், ரிஷிகள் மௌனமாக இருந்து ஜெப தவம் செய்தார்கள். அபாரசக்திகளைப் பெற்றனர் என்பது புலனாகிறது அல்லவா?

[தொடரும்...

க. வீணுகோபால்

கலைபாவ சுவாமிகள்

வாசிப்பு

பல்வேறுபட்ட சிக்கல்கள் நிறைந்த இவ்வுலகில் மனிதனுடைய மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு இன்றும் மெய்த்துணை செய்வது வாசிப்பு. அதிலும் ஆத்மீக விடயங்களை வாசிப்பது ஒருவனுடைய மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கு மட்டுமன்றி, அவனை இறைவனுடன் ஒன்றிக்கவும் துணை செய்கின்றது. ஆகவே இறைவனை வழிபடுவதற்கு நிகர் சமமான பயனை எமக்குத் தரக்கூடிய இவ்வாறான ஆத்மீக சஞ்சிகைகள் எமது வாழ்க்கையை பயனுள்ள வாழ்க்கையாக மாற்றுகின்றது எனக்கூறலாம்.

மலர் வெளியீட்டில் கல்வித்துறைப் பேராசிரியர்
சின்னத்தம்பி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை உடன்படுதல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானைப் பரவையாரிடம் தூதாக அனுப்பினார். இதைக் கேள்வியுற்ற ஏயர்கோன் கலிக்காம நாயனார் சுந்தரர் செயல் தவறு என்று கருதி சுந்தரரை மிகவும் கோபித்தார். ஏற்கனவே தாம்பாடிய திருத்தொண்டத்தொகையில் '' ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்'' என்று பாடிய சுந்தரர் ஏயர்கோன் தன்னைக்குற்றம் சாட்டியது சரியே என்று ஏற்றுக்கொண்டு சிவபெருமானிடம் தன்பிழைக்கு மன்னிப்பும் ஏயர்கோன் கோபமாறித் தன்னுடன் அன்பு கொள்ளவும் வேண்டிச் சிவபெருமானை வணங்கினார். '' பிழை உடன்படுவாராகி வேறினி இதற்குத் தீர்வு வேண்டுவார் விரிபூங்கொன்றை ஆறிடு சடையினாருக்கு அதனை விண்ணப்பம் செய்து நாடொறும் பணிந்து போற்ற '' என்பர் சேக்கிழார்.

இவ்வாறு சுந்தரர் வணங்கி வேண்டியதற்குக் காரணம் ஏயர்கோன் தன்மீது சாட்டிய பிழையை ஏற்றுக்கொண்ட பெருந்தன்மையேயாகும்.

ஏயர்கோன் ஏன் குறை கூறுவான்? சிவபெருமானே சம்மதித்ததால் தானே நான் அவரைத் தூதாக விட்டேன்? ஊரில் உள்ள பெரியவர்கள் முயன்று கைவிட்டபின்தானே சிவபெருமானிடம் முறையிட்டேன்? சிவபெருமான் தான் செல்வது சரியன்று என்று கருதியிருப்பராயின் வேறு தேவர்களையோ யாரையேனுமோ அனுப்பியிருக்கலாமன்றோ? என்றாற் போல சிந்திக்கும் குணம் சுந்தரருக்கு இருந்திருந்தால் பிழைஉடன்படும் நிலை உருவாகியிராது. பிறர்போல தான் குற்றமற்றவன் என்று சாதிக்க முயலாது பிழையுடன்பட்டது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பெரும் தகுதிக்குச் சான்றாகும். இவ்வாறு பிழை உடன்படுதலே சான்றாண்மை = சால்பு என்கிறார். வள்ளுவர் — '' சால்புக்கு கட்டளை யாதெனின் தோல்வி துலை அல்லார் கண்ணும் கொளல் என்பது '' திருக்குறள்.

எனவே நம்மைப் பிறர்குற்றம் சொல்லும்போது அதனைமறுத்து நாம் தூயோர் என்று நிறுவமுயலுதலிலும் பார்க்க அக்குற்றத்தை ஏற்றுத் திருந்தவும் பரிகாரம் செய்யவும் முயலுதலே உயர்ச்சிக்கு வழியாகும்.

★ எங்கு போனாலும்சரி உன் முழு இதயத்தோடு போ. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரர் செய்தது தவறல்ல ஏயர்கோன் குற்றம் சாட்டியதே தவறு என்று தீர்ப்பளிப்பார்போன்று சிவபெருமான் ஏயர்கோனுக்குச் சூலைநோய் கொடுத்து அதன் மூலம் சுந்தரருக்கும் ஏயர்கோனுக்கும் நட்பை உண்டாக்கினார். பிழையறியவராதவர் பிழையை உடன்பட்டாலும் இறைவன் சரியான தீர்ப்பை வழங்குவார் என்ற உண்மையும் சுந்தரர் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் ஒவ்வொருவரும் எம்மை மிகவும் புனிதர் என்று நாமே மதித்துப் பிறர் நம்மைக் குற்றம் சாட்டும் போது அப்பிழையை உடன்பட்டுத் தீர்க்க முயலுதல் நம்மை வளர்ப்பிக்கும் பெருமைக்கும் வாயிலாக அமையும் என்று கொள்ளவேண்டும்.

பண்டிதர் நி. பொன்னம்பலவாணர்
பொன்னாலை, சுழிபுரம்.

---

## நாவடக்கம் தேவை!

ஒரு மகானுக்கு போக்கிரி ஒருவன் சீடனாக இருந்தான். அவனுக்கு அவன் நாக்குத்தான் எதிரி. எல்லோரையும் அவன் திட்டிக் கொண்டே இருப்பான். ஒரு நாள் அவனது உயிரைக் கொண்டு போக நரக எம தூதர்கள் வரப்போகிறார்கள் என்பது அந்த மகானுக்கு முன்கூட்டியே தெரிந்தது. உடனே அவர் அந்தப் போக்கிரிச் சீடனை அழைத்து எம தூதர்கள் வருவதைக் கூறி அவனை எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினார்.

மகான் மற்றைய சீடர்களை அழைத்து அந்தப் போக்கிரிச் சீடனைப் போலவே உடை அணிவிக்கச் செய்து அவனுடன் படுத்துறங்க ஏற்பாடு செய்தார்.

இரவில் எம தூதர்கள் வந்து, இதில் அந்தப் போக்கிரிச் சீடன் யார் என்று தெரியாமல் விழித்தார்கள். எம தூதர்களில் ஒருவன் தன் சாமர்த்தியத்தால் அவனைக் கண்டுபிடிக்க முடிவு செய்தான்.

“எல்லோரும் நன்றாகத்தான் வேடம் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒருவன் மட்டும் ஒரு தவறைச் செய்துவிட்டான்” என்று உரக்கக் கூவினான்.

பயத்தால் விழித்துக் கொண்டிருந்த அந்தப் போக்கிரிச் சீடன் மட்டும் எழுந்து “அது என்ன தவறு?” என்று எம தூதனைப் பார்த்துக் கேட்டான்.

“உன் நாக்கு உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இதுதான் தவறு” என்று எம தூதன் கூறி அந்தப் போக்கிரிச் சீடனை இழுத்துச் சென்றான்.

நாக்கு, பணம் இவை இரண்டையும் நாம் ஆளவேண்டுமே தவிர, அவை இரண்டும் நம்மை ஆளும்படி விட்டுவிடக்கூடாது.

---


★ அடக்கமும் அன்பும் துன்பத்தால் கற்றுக் கொள்ளப்படும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

வேண்டுவோர்க்கு வேண்டுவனவற்றை அள்ளி வழங்கும் அருட் கந்தன் சந்நிதி முருகன். இதனால்தான் இத்தகைய கருணையுள்ளம் கொண்ட சந்நிதி முருகனைத் தினந்தோறும் ஆயிரக்கணக்கான அடியார்கள் உள்ளம் உருகி வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆம் ஆலயத்திற்கு வந்து வழிபட முடியாத ஆயிரக்கணக்கான அடியார்களையே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம் இத்தகைய அன்பர்கள் இடத்தால், தூரத்தால் விலகி இருந்தாலும் உள்ளத்தால் சந்நிதியானுடன் உடனிருந்து வழிபடுவது போன்ற உணர்வுடனேயே வழிபடுகின்றனர். இத்தகைய அன்பர்கள் எமது மாவட்டத்தில் மட்டுமன்றி மாவட்டத்திற்கு வெளியிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும்கூடக் காணப்படுகின்றனர். இதனை 1998ஆம ஆண்டு சந்நிதி கோவிலின் வருடாந்த உற்சவத்திற்காக கனடாவிலிருந்து குடும்பத்துடன் வந்திருந்த தொண்டைமானாற்றைச் சேர்ந்த அன்பர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது உணரக்கூடியதாக இருந்தது.



★ அச்சமே மடமை அச்சமில்லாமையே அறிவு. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரதேசத்தில் இருப்பவர்கள் கூட சந்நிதியானிடம் வந்து போவதற்குப் பல்வேறு கஷ்டங்களைத் தற்பொழுதும் எதிர் நோக்க வேண்டியுள்ளது. அந்தளவுக்குச் சமகால நாட்டுச் சூழ்நிலைகளும் போக்குவரத்துக் கஷ்டங்களும் அடியார்களுக்குச் சிக்கல்களையும், தடைகளையும் தாமதங்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பது நாங்கள் அறிந்ததே. இத்தகைய சிக்கல்களையும் தடைகளையும் தாண்டி எந்த விதத்திலும் சந்நிதியானிடம் வந்து செல்ல வேண்டும் என்ற பக்தி உணர்வுடன் சந்நிதியானிடம் வந்து செல்கின்ற அடியார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறு இவர்கள் வந்து செல்கின்றபோது பல அன்பர்களுக்குப் பயணத்தருணங்களில் போக்குவரத்தின் பொழுது மலைபோல எதிர்நோக்கிய சிக்கல்கள் பனிபோல மறைந்து போனது பற்றியும், சந்நிதியானிடம் வந்த பின்பு தங்களின் உள்ளச்சுமை குறைந்து மனத்தில் நிம்மதி ஏற்பட்டது பற்றியும் தங்களின் வயிற்றுப்பசி நீங்கி உள்ளம் திருப்தியடைந்தது பற்றியும் தங்கள் அனுபவங்களை எம்முடன் பகிர்ந்த வண்ணம் உள்ளனர். இவ்வாறு கடந்த மார்கழி மாதம் திருவாசக விழாவிற்காக வந்தபொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை எமக்கு எழுதி அனுப்பியுள்ளவர் யாழ்/கலட்டி மெ. மி. த. க. பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி உமாராணி பேரானந்தம் அவர்கள். அதனை வாசகர்களுக்கு அப்படியே தருகின்றோம்.

"அதிகாலை நேரம் நானும் எனது கணவரும் அவசர அவசரமாக அரக்கப் பரக்க ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தோம். எதற்காக? சந்நிதியானிடம் செல்வதற்காகத்தான். ஏன்? எனது மாணவர்க்கு முதற் பரிசு கிடைத்திருந்தது. பண்ணிசைப் போட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தியதல்லவா? அதற்குத்தான் பரிசு பெறச் செல்லவே ஆயத்தங்கள் நடந்தன. அச்சமயத்தில் ஏதோ ஒரு இரைச்சல் நாட்டு நிலைவரம் சற்று அவதானிக்க வைத்தது. சில நிமிட நேரத்தில் புரிந்தது புதிர். வேறொன்றுமில்லை. மழைதான் இரைச்சலுடன் கொட்டத் தொடங்கியிருந்தது. எம்மிருவருக்கும் யோசனை பிடித்துக் கொண்டது. எப்படி இந்த மழையில் இரண்டு பஸ் பிடித்துச் சென்று பிரயாணம் செய்து திரும்புவோம் என்று.

அவ்வேளையில் "ரீச்சர்" என்று ஒரு குரல். ஓ! ஜீவிதா (பரிசுபெற்ற மாணவி) வந்து விட்டார். நாம் கூட, என் மகனுடன் நாமிருவரும் ஜீவிதா, அவரின் தந்தையார் நால்வரும் "பொருத்த நேரத்தில் இந்த மழை வந்துள்ளதே" என்று சலித்த வண்ணம் புறப்பட்டோம். நாச்சிமார்கோவில் ஆலயவாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றவுடன் மழை ஓய்ந்து விட்டது. வாகனங்கள் எதுவும் காணோம். நின்று நேரம் கடத்தினால் 751ஆம் இல முதல் பஸ்ஸை விட்டு விடுவோம். என்று எண்ணி நடையில் யாழ் பஸ் நிலையத்தை அடைந்தோம். சந்நிதியானின் அருட்கடாட்சம் இங்கிருந்துதான் எம்மீது பூரணமாக விழுந்ததெனலாம். 751ஆம் இல. பஸ் பழுத டைந்து விட்டது. என நேரக்காப்பாளர் கூறியவாறிருக்க 750 ஆம் இல பஸ் வந்தது அதனை 751ஆம் இல வழிப்படி செல்லுமாறு கூறிப் புறப்பட வைத்தனர். நாம் சந்நிதியான் அருளை வியந்த படி ஏறி ஒருவித கஷ்டமுமின்றி ஆலயத்தையடைந்தோம்.

தொண்டைமானாற்றில் நீராடி எமது பாவங்களைத் தொலைத்து ஆலய அபிடேகம், நால்வர் உலா, திருவாசகவிழா என்பனவற்றிலும் இனிது பங்குபற்றினோம். காது மனசு வயிறு எல்லாவற்றிற்கும் நன்கு தீனி கிடைத்தது விழா நிறைவு நேரமும் நல்லமழை எவ்வாறு வல்லைச்சந்தி வந்து வீடு திரும்பப் போகி றோம் என்று மனத்தைப் போட்டுக் குழப்பியபடி பேரவை உறுப் பினர் திரு. சி. நாகலிங்கம் அவர்களின் பாரியாருடன் உரையாடி னேன். அவர் உலக மாதா அருள் வாக்கு அளிப்பது போல '' எமது உறவினர் சிற்பக்கலாநிதி சிவரத்தினம் ஐயா அவர் களின் வாகனம் ஒன்று திருநெல்வேலி வரை செல்கிறது. அதில் உங்களை நாம் அனுப்பி வைக்கிறோம்'' எனக் கூறினார். அவர் களின் காலமறிந்த பேருதவியுடன் நாம் திருநெல்வேலிக்கு புஸ்பக விமானத்தில் வருவது என்று கூறுவார்களே அவ்வாறு ஒரு சிறு அலுப்புச் சலிப்பின்றி வந்து இறங்கினோம். அல்ல அல்ல. சந்நிதியான் திருவருளால் இறக்கப்பட்டோம் என்றுதான் கூற வேண்டும்.

ஏறக்குறைய இருபத்தைந்து மைல் தூரத்திற்குச் சென்று நாம் திரும்பினோமா! என்று அதிசயிக்கத்தக்கவாறு அமைந்தது இப்பயணம் காலை முதல் மாலை வரை மழை. மழை மழை ஆனால் சிறு துளி தூவானம் கூட எம்மீதுபட இறைவன் விடவில்லை. அதுதான் அவனருள், அவ்வருள் எம்வாழ்நாள் பூராக எமக்குக் கிடைக்கும் என்கின்ற பூரண நம்பிக்கையுடன் இவ்வநுபவத்தை உங்களுடன் கலந்து இன்புறுவதில் மகிழ்கிறேன்.''

இவ்வாறு சந்நிதிமுருகனைத் தரிசிக்க வருகின்ற அடியவர்களின் பலவிதமான துன்பங்களையும் போக்குகின்ற கலியுகக்கந்தன் அவர்கள் பசிப்பிணியையும் போக்குகின்ற தனிச்சிறப்பையும் இவ்வாலயத்தின் சூழ லிலே ஏற்படுத்தியுள்ளான் என்பதையும் நாம் உணரமுடிகின்றது. ஆம்

★ பேராசை என்பது ஒரு பெரிய அரக்கி. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை முடிவடைகின்ற போதெல்லாம் 64 ஆலம் இலைகளில் படைக்கப் படும் மருந்து எனக்கூறப்படும் அமுதினையும், சிலவேளைகளில் மதிய பூசை முடிவடைந்தபின்பு ஆலயப் பூசகர்களே வழங்குகின்ற அன்னதா னத்தினையும் கூட அடியவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய நடைமுறை இவ் வாலயத்திற்கே உள்ள சிறப்பம்சம் எனக்கூறலாம்.

இத்தகைய சந்தர்ப்பங்களையும் தவறவிடுகின்ற அடியவர்களின் பசிப்பிணியைப் போக்குகின்ற வகையில் சந்நிதியான் ஆச்சிரமம் தனது அன்னதானத் தொண்டினைச்சிறப்பாக மேற்கொண்டுவருகிறது. அதுவும் தூரஇடங்களிலிருந்து வருகின்ற அடியவர்கள் எவ்விதமான தயக்கமுமின்றி எந்த நாளிலும் எந்த நேரத்திலும் சந்நிதியான் ஆச்சிரமத்திற்குச் சென்று தமது பசியைப்போக்கக் கூடிய வசதிகளை சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் காரணம் இங்கே வீற்றிருக் கின்ற அன்னதானக் கந்தனின் அருளைத் தவிர வேறு எந்த விளக் கத்தை எம்மாற் கூறமுடியும்.

ஓம் முருகா!

ந. அரியரத்தினம்
தொண்டைமானாறு

குறிப்பு: சந்நிதி முருகப் பெருமானுடைய இவ்விதமான அற்புத நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஒவ்வொரு மலரிலும் வெளி வரவுள்ளன. இவ்வாறான அற்புத நிகழ்வுகளை அனுப வித்த அன்பர்கள் தகுந்த ஆதாரத்துடன் விளக்கமாகக் குறிப்பிட்டு மலர்க்குழுவிற்கு அனுப்பினால் அவற்றை யும் இத்தொடரில் இடம் பெறச் செய்யலாம்.

அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாக மாட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடத்தை மேன்மைப்படுத்தும்
மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# பாண்டு மன்னனின் அந்திமக் கிரியைகள்

பாண்டுமன்னன் உயிர் நீத்தமையைக்கண்டு குந்திதேவியும் மாத்ரி தேவியும் பஞ்சபாண்டவர்களும் கலங்கித் தவித்து நின்றனர். செய்தி அறிந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்த முனிவர்களும் அந்தணப் பெரியோர்களும் பாண்டுமன்னனின் உடலை நீராட்டி செஞ்சந்தனம் பூசிப் பட்டாடை உடுத்தி நறுமணமலர் மாலைகளால் அலங்கரித்துப் பீடமொன்றில் வைத்தனர். துயில்கொள்பவர் போல் கண்மூடியிருந்த பாண்டு மன்னனின் உடலைக் கண்டதும் குந்திதேவியும் மாத்ரிதேவியும் கதறியழுது மூர்ச்சித்தனர். தருமர் முதலானோர். '' தந்தையே தாங்களில்லாது இவ்வுலகில் எவ்வண்ணம் வாழப்போகின்றோம் '' என்று கதறினர். அந்தணப்பெரியோர்கள் பாண்டுமன்னனுக்கு அந்திமக் கிரியைகள் செய்ய ஏற்பாடுகளில் முனைந்தனர். மூர்ச்சை தெளிந்த குந்திதேவி '' மூத்த மனைவியாகிய யான் அவரின் நன்மை தீமைகட்குப்பாத்தியதையுள்ளவள் எனவே அவருடன் உடன்கட்டையேறி உயிர் நீக்கப்போகின்றேன். மாத்ரி குழந்தைகள் எல்லோரையும் வளர்க்கும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கின்றேன் எனக்கு விடைதா '' என்று கூறி நின்றாள். அப்போது மாத்ரிதேவி '' அக்கா அவரின் மரணத்துக்கு நான் காரணமாயிருந்தமையாலும் வயதில் சிறியவளாக இருப்பதனால் குழந்தைகளைத் திறமையாக வளர்க்க அனுபவம் போதாமையாலும் நான் அவருடன் உடன் கட்டையேறுகின்றேன் என்று கூறினாள்.

இவர்களின் உரையாடல்களைச் செவிமடுத்து நின்ற அந்தணப் பெரியோர்கள் அவர்களை நோக்கி '' உடன் கட்டையேறுவது பதிவிரதா தருமமாகும். ஆனால் உங்கள் குழந்தைகள் இளவயதினர் அவர்களைத் தக்கமுறையில் பேணிவளர்க்க வேண்டும் அதுவுமல்லாது கற்புள்ள பெண் எனப்படுபவள் கணவனிறந்தபின் மனம்வாக்குக்காயம் என்பவற்றைக் கட்டுப்படுத்தி விரத நியமங்களை மேற்கொண்டு இவ்வுலகில் வாழ்வாளாயின் அதனால் அவளுக்கு மேன்மை, அவள் கணவனுக்கும் மேன்மை, அவளின் குழந்தைகளும் மேன்மை நிலையையடைவர் எனவே நீங்கள் இருவரும் உடன்கட்டையேறுவதைக் கைவிடுங்கள் '' எனவுரைத்தனர்.

★ பலவீனர்கள் மற்றவர்களைத் தூற்றுவார். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணப்பெரியோர்களின்னுரையைச் செவிமடுத்த குந்திதேவி தன் புதல்வர்களை உத்தேசித்து உடன்கட்டையேறுதலைக் கைவிட்டாள். ஆனால் மாத்திரிதேவியோ "தருமத்தை அனுஷ்டித்த எங்கணவருடன் சென்று அவருக்குப் பணிவிடை செய்ய விரும்புகின்றேன்" எனக்கூறித் தனது புதல்வர்களான நகுல சகாதேவர்களைக் குந்திதேவியிடம் ஒப்படைத்துத் தருமரை தன்கையினாற்பற்றி "மூத்த புதல்வனாகிய நீ அறவழி நடப்பவன் எனவே தம்பியர் இருவரையும் கவனமாக நடத்துவாயாக" என்றுகூறி தன்புதல்வர்களை நோக்கி "தந்தையிறந்தபின் மூத்தபுதல்வனே அக் குடும்பத்தின் தந்தையாகின்றான் எனவே அண்ணாவின் உரைகளைத் தந்தையின் உரைகளாக ஏற்று அண்ணாவின் சொற்படி நடப்பீர்களாக" என்று கூறிப் புதல்வர்கள் எல்லோரையும் உச்சிமோந்து தழுவிக்கொண்டாள். குந்திதேவியையும் அந்தணப் பெரியோர்களையும் வணங்கி ஆசி பெற்றாள். அப்போது குந்திதேவி மாத்திரிதேவியை நோக்கித் தளதளத்த குரலில் "தங்காய் நீ பெரும்பேறு பெற்றவளாகிறாய் கணவருடன் உடன் கட்டையேறும் பாக்கியம் கிடைக்கப்பெற்றாய் சொர்க்கம் உனக்குக் கிட்டுவதாக" என ஆசீர்வதித்தாள். அந்தணப்பெரியோர்கள் பாண்டுவின் உடலுக்குத் தகனக்கிரியைகளைச் செய்தனர். அத்தீயில் மாத்திரி தேவியும் இரண்டறக்கலந்தாள். தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய அந்திமக்கிரியைகளைத் தருமர் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகச்செய்து முடித்தார். தகனக்கிரியைகள் முடிந்தபின்னர் முனிவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து யோசனைசெய்து குந்திதேவியையும் பாண்டவர்களையும் அழைத்துச் சென்று அஸ்தினாபுரத்தில் பீஷ்மரிடம் ஒப்படைத்து பாண்டு மன்னன் இறந்த செய்தியையும் தெரிவித்து வரவேண்டுமென்று முடிவு செய்தனர்.

அதன்வண்ணம் முனிவர்கள் அந்தணப் பெரியோர்கள் எல்லோரும் ஒன்றாகக் குந்திதேவியையும் புதல்வர்களையும் அழைத்துக் கொண்டும் பாண்டுமன்னனின் அஸ்தியை ஓர் பேழையில் எடுத்துக்கொண்டும் அஸ்தினாபுரத்தைச் சென்றடைந்தனர். பீஷ்மர் முதலானோரிடம் செய்தியைக் கூறி பாண்டவர்களையும் குந்தி தேவியையும் ஒப்படைத்துக் காடேகத் திரும்பினர். பாண்டு மன்னனின் முடிவையறிந்த பீஷ்மர் விதுரர் முதலானோர் சொல்லொணாத் துயரில் மூழ்கினர். நகர மாந்தர் அனைவரும் கவலையில் வாடி நின்றனர். பீஷ்மர் முதலானோர் பாண்டு மன்னனின் அஸ்தியைக் கங்கையில் சேர்த்துக் கிரியைகளைச் செய்து முடித்தனர். பன்னிரண்டு தினங்கள் நகரம் முழுவதும் துக்கம் அனுஷ்டித்தனர். பாண்டுவின் பெயரால் பீஷ்மர் சிறந்த தான தருமங்களைச் செய்தார். சத்தியவதி அம்பிகை அம்பாலிகை என்போரும் பெருந்துயருற்றிருந்த அவ்வேளையில் அங்கே வியாச மகரிஷி எழுந்தருளினார். சத்தியவதியை நோக்கி "தாயே இறந்த காலம் நல்லதாகவும் வருங்காலம் மிகவும்

கொடுமையானதாகவும் இருக்கப் போகின்றது. துரியோதனன் பாண்டவர்கள் பால் பொறாமை கொண்டு கொடுஞ்செயல்கள் பலவற்றைச் செய்வான். இதனால் உன் குலத்துக்குப் பெரும் அழிவு ஏற்படப் போகின்றது இவற்றைப் பார்த்து மனச்சஞ்சலமடையாது கானகம் சென்று தவம் புரிவாயாக'' என்று கூறி வியாச பகவான் மறைந்தருளினார். இவற்றைச் செவியுற்ற அன்னை சத்தியவதி தனது மருமக்களாகிய அம்பிகை அம்பாலிகை இருவரையும் அழைத்துக் கொண்டு பீஷ்மர் முதலானோரிடம் விடைபெற்றுக் கானகமேகினர் கடுந்தவம் புரிந்து சொர்க்கத்தை அடைந்தனர் மூவரும்.

## பாண்டவர்களின் இளமைக்காலம்

அஸ்தினாபுரத்திற்கு வந்த பாண்டவர்களும் குந்திதேவியும் பாண்டு மன்னனின் மாளிகையில் வசித்து வரலாயினர். துரியோதனனாதியோருடன் ஒன்றாகக் கூடி விளையாடி மகிழ்ந்தனர். விளையாட்டுக்கள் யாவற்றிலும் பீமன் முதன்மையானவனாகத் திகழ்ந்தான். இதனால் துரியோதனன் உள்ளத்தில் பொறாமை மூண்டது. பீமனின் திறமையும் குறும்புத்தனமும் துரியோதனன் மனத்தில் வேதனையை உண்டாக்கியது. பாண்டவர்களின் நற்பண்புகளும் திறமைகளும் அவர்களைப் புகழ் பெற்றவர்கள் ஆக்கின. இதனால் துரியோதனனின் உள்ளத்தில் இருந்த பொறாமை பெருந்தீயாக உருவெடுத்தது. அதிபராக்கிரமமுடைய பீமன்பால் வஞ்சமுடையவனானான். எனவே பீமனைச் சூழ்ச்சியினாற் கொன்றுவிட முடிபு செய்தான்.

இவ்வண்ணம் ஒரு நாள் பாண்டவர்களை உடனழைத்துக் கொண்டு நீர்விளையாட்டின் பொருட்டுக் கங்கைக் கரைக்குச் சென்றான். மாலை வரையில் நீர் விளையாடி அறுசுவை உணவுகள் உண்டு கங்கைக்கரையில் இளைப்பாறலாயினர். இவ்வேளை பீமன் ஒரு புறமாக அயர்ந்து தூங்கினான். தருணம் பார்த்திருந்த துரியோதனன், மற்றைய பாண்டவர்களுக்குத் தெரியாத வண்ணம் பீமனைக் கொடிகளாற் கட்டிக் கங்கையில் தள்ளி விட்டான். நீரினில் மூழ்கிய பீமன் உணர்வு பெற்று உறக்கங் கலைந்து கொடிகளை அறுத்துக் கரை சேர்ந்தான். கரை சேர்ந்த பீமன் எல்லோருமிருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான். பீமனைக் கண்ட துரியோதனன் கலக்கமடைந்தான். அன்றிரவு பீமன் உறங்கும் போது கொடிய விஷம் மிக்க நாகங்களைப் பீமன் மீது ஏவினான். ஆனால் கடினமான தோலையுடையவனாகையால் நாகங்கள் பீமனைக் கடிக்கவில்லை. கண் விழித்த பீமன் பாம்புகளைக் கையால் தள்ளி விட்டு மீண்டும்

★ அறியாமையை விட அலட்சியமே கொடியது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கலானான். இதனாலும் பீமன் இறக்காததைக் கண்ட துரியோதனன் கொடிய விஷம் கலந்த உணவை பீமனுக்குக் கொடுக்கலானான். இச்செயலும் பயனற்றுப்போகவே தனது மாமனாகிய சகுனியின் ஆலோசனையுடன் கங்கைக்கரைக்கு மீண்டுமொரு முறை பாண்டவர்களை அழைத்துச் சென்றான். கங்கையின் ஆழத்தில் சூலங்கள் பலவற்றை நாட்டி பீமன் தூங்கும் பொழுது சூலங்களுக்கிடையில் அவனைத் தள்ளி விட்டான். இனி பீமனால் திரும்பிவர முடியாதென்று மகிழ்வில் துரியோதனன் அரண்மனைக்குத் திரும்பத் தயாரானான். அப்போது தருமர் பீமனைக் காணாது பீமன் எங்கே என்று துரியோதனனை வினாவினார். நமக்கு முன்பே வீடு திரும்பி விட்டான் போலும் என்று துரியோதனன் சொல்லியதை நம்பிய தருமரும் அரண்மனை திரும்பலானார். ........

[தொடரும்... ...

தூயவன்,
வலிவடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை
(மல்லாகம்)

வாரியார் வாரிசு
சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர்

## அருளாளர்களின் ஆக்கங்கள்

அருளாளர்களுடைய ஆக்கங்களை, சூக்தங்கள் புனிதமானவை அவற்றின் சிறப்பையும், பொருளையும் எல்லோரும் முழுமையாக விளங்கிக் கொள்வார்கள் என்றோ அவற்றின் புனிதத் தன்மையைப் பேணுவார்களென்றோ இன்று நாம் எதிர்பார்க்க முடியாதுள்ளது. ஆகவே ஆலயங்களிலும், வித்தியாலயங்களிலும் இவற்றைப் பயன்படுத்தும் போது அவற்றின் புனிதத்தன்மையை உணர்ந்து பேணி நாம் முன்மாதிரியாக நடக்கவேண்டும்.

மார்கழிமாத மலர் வெளியீட்டில் பல்கலைக்கழகப்
பேராசிரியர் திரு. அ. விநாயகமூர்த்தி அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து

★ மன்னித்து விடுதல் மிகப்பெரிய தண்டனை ஆகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகேசு சுவாமிகளின்

# இரண்டாவது குருபூசைத்தினம்

## 25 - 03 - 1999

**தோற்றம் :-**



தும்பளை என்னும் கிராமத்தில் 27-05-1920ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை இலட்சுமிப் பிள்ளை தம்பதிகளுக்கு மூத்த மகனாக முருகேசுசுவாமிகள் இப்பூவுலகில் அவதரித்தார்கள். 1960 ஆம் ஆண்டு சுவாமிகள் வயிற்றில் ஏற்பட்ட புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக மகரகம ஆஸ்பத்திரிக்கு செல்வதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப் பட்டன. அப்பொழுது சுவாமிகளை ஆட்கொள்வதற்கு திருவுளம் கொண்ட சந்நிதிமுருகன் கனவிலே தோன்றி "முருகேசா நீ என்னிடத்திற்கு உடனடியாக வந்துசேர்" என்று கட்டளையிட்டு சந்நிதிக்கு அழைத்தார். சந்நிதிக்கு வந்துசேர்ந்த முருகேசு சுவாமிகளின் புற்றுநோய் படிப்படியாகக் குறைவடைந்து இறுதியில் முற்றாக அற்றுப்போய் விட்டது. இவ்வாறு புற்றுநோய் நீங்கப்பெற்ற முருகேசுசுவாமிகள் சந்நிதியான் கருணையை நினைத்து சந்நிதியானின் வாசலில் இருந்து மனம் உருகி வழிபட்டு தன்னை சந்நிதியானின் அடிமையாக்கிக் கொண்டார்கள்.

**ஞானவாழ்க்கை:-**

முருகேசு சுவாமிகள் செய்தபூர்வபுண்ணிய பலனாய் அவரின் நோய் நீங்கப்பெற்றது மட்டுமன்றி சந்நிதிமுருகனால் அவர் ஆட்கொள்ளப்

★ பழி வாங்குவதற்குப் பெரு வழி மன்னித்து விடுதல். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பெறுதற்கரிய பேறாகிய ஞானம் கிடைக்கப்பெற்ற ஒரு மகானாகவும் இப்பூவுலகில் உலாவத் தொடங்கினார்கள். இக்காலத்தில் சுவாமிகள் பலரது துன்பங்களைப் போக்கி அவர்களை ஆத்மிகப்பாதையில் வழிநடாத்தும் அரிய பணியையும் மேற்கொண்டார்கள் பார்வையிலே சாதாரண மனிதனாகத் தென்பட்ட சுவாமிகள் பல்வேறு இடங்களுக்கும் சென்று மக்களுடன் மக்களாகப் பழகி அவர்களை நல்வழிப்படுத்தியது மட்டுமன்றி அவர்களது வாழ்க்கை பலவகையிலும் மேம்படுவதற்கும் துணைபுரிந்தார்கள். இதனால்தான் எமது நாட்டில் மட்டுமன்றி கடல் கடந்தும் பலநாடுகளில் முருகேசசுவாமிகளின் அன்பர்களாகவும் அவரது வழிமைப்பின்பற்றும் அடியாவர்களாகவும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

## ஆலயத் தொண்டு:-

சந்நிதிகோவிலின் வரலாற்றில் முருகேசசுவாமிகளின் தொண்டு அளவிடமுடியாதவை. முக்கியமாக 1987 ஆம் ஆண்டு வடமராட்சி இராணுவ வன்செயலின்போது ஆலயம் சிதைவடைந்து நித்திய பூசைகள் தடைபட்டிருந்த போது அதனைப் புனரமைப்புச் செய்து மீண்டும் நித்தியபூசைகள் ஆரம்பிப்பதற்கு சகல வகையிலும் பெரும்பங்கு ஆற்றியவர் முருகேசசுவாமிகள். அதேபோன்று ஆலயத்தின் ஏனைய கட்டுமானப் பணிகளைச்செய்வதற்கும் அவர்செய்த பங்களிப்பை ஆலய பரிபாலன சபையினர் நன்றியுடன் இப்பொழுதும் நினைவு கூறுகின்றனர்.

## ஆச்சிரமத் தொண்டு:-

சந்நிதிகோவிலில் நித்தியபூசைகள் நடைபெறுவதைப் போன்று நித்திய அன்னதானப்பணியும் அவசியமானதொன்று என்பதை எல்லோரும் அறிவர். இதனை நன்கு உணர்ந்ததினால்தான் முருகேசசுவாமிகளும் தமது ஆரம்பகாலம் தொடக்கம் இறுதிக்காலம் வரை அன்னதானத் தொண்டிற்காகத் தன்னை அர்ப்பணித்து அரும்பாடுபட்டார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமம் தற்பொழுது அமைந்திருக்கும் இடத்தில் அமைக்கப்பட வேண்டியதேவை ஏற்பட்டபொழுது அதற்குக் காணிசமான நிதி உதவி செய்து மேலும் பல அன்பர்களின் உதவியுடன் தானே அத்திவாரம் இட்டு அதனைக் கட்டிமுடித்தது மட்டுமன்றி அதானைத்திறந்து வைக்கின்ற கைங்கரியத்தையும் சுவாமிகளே மேற்கொண்டார்கள். நடமாடும் தெய்வமாக விளங்கிய சுவாமிகளின் பங்களிப்பும் ஆசிர்வாதமும் கிடைத்தமையால் சந்நிதியான் ஆச்சிரமம் எந்தக்குறைவுமின்றி அடியார்களுக்கு செய்யவேண்டிய தொண்டுகளைச் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றது.

★ இறைவன் மனித இனத்தின் நம்பிக்கை இழக்கவில்லை. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரவைத் தொடர்பு:-

சந்நிதியான் ஆச்சிரமத்தினுடைய பணிகளுக்கு மட்டுமன்றி ஆச்சிரமத்தை அடித்தளமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்ற சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினுடைய செயற்பாடுகளுக்கும் அதனுடைய வெள்ளி நிகழ்வுகளுக்கும், நூல் வெளியீடுகளுக்கும் உற்சாகம்தந்து பேரவையினருடன் சேர்ந்து தானும் ஒரு உறுப்பினர் போல செயற்பட்டு வந்ததையும் எம்மால் மறக்கமுடியாதுள்ளது.

கும்பாபிஷேகதினம்:-

1987 ஆம் ஆண்டு வன்செயலின் பின் ஆலயம் புனரமைக்கப்பட்டு 1998ஆம் ஆண்டு பங்குனிமாதம் கும்பாபிஷேகம் செய்து நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்டதினம் வருடாவருடம் கும்பாபிஷேக தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சுவாமிகள் இறைபதம் அடைந்தபின்பும் இத்தினம் எந்தவித குறைவும்இன்றி அவரது அடியார்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது பங்குனிமாதம் வளர்பிறையில் வருகின்ற அச்சுவினி நட்சத்திரத்தில் இத்தினம் கொண்டாடப்படுகிறது. அதாவது எதிர்வரும் பங்குனிமாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை ஆலயத்தில் இத்தினம் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

அறுபத்துமூவர் குருபூசை:-

ஆச்சிரமத்தில் அன்னதானத்தொண்டை மேற்கொள்ளும் பொழுது அறுபத்துமூவர் குருபூசையை முருகேசுசுவாமிகள் விரும்பி மேற்கொள்வது வழக்கம். இதனால் சுவாமிகளினுடைய அடியார்கள் ஆச்சிரமத்தில் அறுபத்துமூவர் குருபூசை மண்டபம் ஒன்றை சுவாமிகளின் நினைவாக ஏற்கனவே உருவாக்கியுள்ளார்கள். எதிர்வரும் கும்பாபிஷேக தினத்திலும் குருபூசைத்தினத்திலும் இந்த மண்டபத்தில் அறுபத்துமூவர் குருபூசை நடைபெறவுள்ளது.

ஆகவே நடைபெற இருக்கின்ற கும்பாபிஷேக தினத்திலும் 25 - 03 - 99 இல் நடைபெறவுள்ள முருகேசுசுவாமிகளின் குருபூசைத் தினத்திலும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்

ஊழ் நல்லவருக்கு வழி காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயம்

### விடைகள்

1) திருவிளையாடற்புராணம்.

2) 1000

3) காளிதாசர்.

4) இரகசியம், வேதாந்தம், வேதசிரசு அல்லது சாந்திபாடம்.

5) சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மன்வந்தரம்.

6) 9

7) நக்கீரர்

8) காண்டபத்தியம்.

9) பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார்.

10) ஆண்டாள்.

11) நாவலர்.

12) அறம், பொருள், இன்பம், வீடு.

13) 18.

14) உபாகமங்களுள் ஒன்று.

15) ஆயுர், தனுர், காந்தர்வம், அர்த்தம்.

16) பிரமசூத்திரம்.

17) குமரகோட்டம்.

18) செல்வச்சந்நிதி, மண்டூர், கதிர்காமம்.

19) பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்.

கொடுத்துக் கெட்டவர் எவருமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மன்னர்கால இலக்கியங்கள்

இலங்கை மீது கலிங்க மன்னன் படையெடுத்து பொலனறுவையைக் கைப்பற்றிய பின்னர், அடுத்த ஆண்டு கலிங்க மாகனின் சகோதரரான ஜெயபாகு என்பவன் 1216 இல் இலங்கையின் வடபாகத்தைக் கைப்பற்றி அங்கு தனது ஆட்சியை ஏற்படுத்திய காலத்திலிருந்து வட பகுதியில் தனியரசு ஒன்றின் ஆரம்பம் தொடங்கி விட்டது எனலாம். இதன் பின்னர் இலங்கை மீது பாண்டியப்படையெடுப்புக்கள் பல நிகழ்ந்தன. குலசேகர பாண்டியனது சேனைத் தளபதி யாழ்ப்பாணத்தை மீண்டுமொரு முறை கைப்பற்றி தனியரசை ஏற்படுத்திக் கொண்டான். அக்கால கட்டத்தில் இருந்து 1621 ஆம் ஆண்டு வரை இலங்கைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் அக்காலம் யாழ்ப்பாண மன்னர் காலம் என அழைக்கப்படுகின்றது.

செகராச சேகரன் என்னும் ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்தின் அரசனாகியதும் தமிழை வளர்க்கும் பெரு விருப்புடையவனாய் தென் இந்தியாவிலிருந்து தமிழ்ப் புலவர்களையும் பண்டிதர்களையும் வரவழைத்து தமிழ்ச்சங்கம் ஒன்றை அமைத்து அதன் மூலம் புதிய நூல்களை ஆக்க முயன்றான். சிங்கை நகரில் அமைந்த தமிழ்ச் சங்கத்தில் இலக்கண இலக்கிய நூல்கள் மட்டுமன்றி சோதிட, வைத்திய, கணித நூல்களும் இயற்றப்பட்டன. செண்பகப்பெருமாளின் படையெடுப்பால் தலைநகரம் நல்லூருக்கு மாற்றப்பட்ட போது பரராசசேகரன் காலத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் உருவாக்கப்பட்டது. எனவே மன்னர்கள் தமிழ்ப் புலமை கொண்டவர்களாக இருந்தமையும், அவர்கள் தமிழகத்தோடு கொண்டிருந்த தொடர்புகளும் இலக்கிய வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைந்திருந்தன. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இச்சம காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு வெளியே தோன்றிய நூல்களும் யாழ்ப்பாண மன்னர் கால இலக்கியமாகவே கொள்ளப்படுகின்றது.

## இக்காலத்தில் தோன்றிய நூல்களும் அவற்றின் வகைகளும்

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி செய்த இக்காலப் பகுதியில் பாரம்பரிய அறிவியல் நூல்களான சோதிட நூல்களும் வைத்திய நூல்களும் ஒரு வகையைச் சார்ந்தன. யாழ்ப்பாண மன்னர்கள் அறிவியல்

★ மரணம் என்பது புதுவாழ்வுக்கு உறுதி மொழி ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை வளர்ச்சியில் கொண்டிருந்த ஆர்வமே இதற்கு அடிப்படைக் காரணமாகும். " அறிவு இலக்கியத்தைப் பேணுவதில் யாழ்ப்பாணத்திற்கு எழுநூற்றாண்டுப் பாரம்பரியம் உண்டு " பேராசிரியர் வேலுப்பிள்ளை கூறுவது இவ்விடத்தில் நினைவு கூறத்தக்கது.

இக் காலத்தில் எழுந்த முதல்த் தமிழ் நூல் யாழ்ப்பாணத்திற்கு வெளியே தம்பதேனியாவில் தோன்றியதாகும். நாலாம் பராக்கிரமபாகு மன்னனின் வேண்டுதலை ஏற்று போசராச பண்டிதர் இயற்றிய சரசோதி மாலையே எமக்குக் கிடைக்கும் முதலாவது எழுந்த தமிழ் நூலாகும். விருத்தப்பாவில் பன்னிரு படலங்களாக இயற்றப்பட்டு அம்மன்னனது சபையிலே அரங்கேற்றப்பட்டிருக்க வேண்டும். இந்நூல் மூலம் தம்பதேனியாவில் பல தமிழறிஞர் வாழ்ந்தனர் என்றும் அவன் தமிழ் அறிந்த மன்னன் என்பதும், சோதிடப் பிரியன் என்பதும் இந்நூல் மூலம் அறியப்படுகின்றது.

யாழ்ப்பாண அரசர்கள் தமது பெயரில் நூல்களை இயற்றுவதில் ஆர்வம் கொண்டிருந்தனர் என்பதும் அறியப்படுகின்றது. செகராச சேகரனின் வேண்டுதலின் பேரில் செகராச சேகரமாலை என்னும் சோதிட நூல் சோமசன்மா என்பவரால் பாடப்பட்டுள்ளது. நூலின் பல இடங்களில் மன்னன் புகழ் பாடுதல் ஒரு முக்கிய பண்பாக அமைந்திருக்கின்றது. " சேது காவலன் விற்றை விஞ்சை செகராச சேகரன் " என்று எல்லாம் குறிப்பிடப்படுவதனைக் காணலாம். செகராசசேகரம் பரராஜசேகரம் என்னும் இரு வைத்திய நூல்களும் அரசர் பெயரிலேயே இயற்றப்பட்டுள்ளது. நோய்கள், நோய்களின் குணம் அவற்றுக்கான சிகிச்சை முறை என்பன இந் நூல்களில் கூறப்பட்டுள்ளன.

(வளரும் .........

இ. நடராசா

(அதிபர், யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to Learn English

## PART - 14

1. **Underline the correct word.**

(a) The medicine did not have any bad affect/effect on the patient.

(b) The naughty boy through/threw the ball at me.

(c) The wind blew/blue hard and the boat/bought was tossed about.

(d) The citizen of Sri Lanka is eligible/legible to vote at election.

(e) When my Aunt/Ant lighted the lamp/lamb she burnt her finger.

(f) I don't know whether/weather there will be rain/reign next weak/week

(g) There is no peace/piece today in the world.

(h) He is so week/weak that he cannot even stand.

★ பொறுமையே நீடித்த பிரார்த்தனை ஆகிறது. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **Fill in the blanks using the suitable Phrases. Two and a half hours, the rest of the day, ten miles, an hour's.**

Mohan and Ravy set out early in the morning and walked a distance of ……… in ……… They were tired and dirty by the time they reached the nearest Village. After a dip in a stream and ……… rest the boys began to resume their journey When a sudden shower which lasted ……… made them givcup their journey.

3. **Arrange these sentences in the correct order so as to form a story.**

(a) Then he found Mr Ponner still waiting for him.

(b) One day Ram, who was very hungry, saw a tree full of mangoes.

(c) He quickly slid down the tree and ran away, but Mr Ponner chased him.

(d) When he had fill noticed Mr. Ponner the owner of the tree, stand beneath it.

(e) He Jumped into a river to get rid of the ants but to his horror he saw a crocodile in the water and he had to swim back to the bank.

(f) He Jumped over a fence to get away from Mr. Ponner but he landed on an ant hill and ants began to crawl over him.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(g) He tried to run away but he found difficult as his clothes were wet, and he was caught and soundly beaten.

(h) He climbed the tree to eat them.

4. Match the following sentence Parts:-

(a) The table is too heavy .................. for her to wear.

(b) The clothes are too old .................. for her to lift.

(c) The coffee is too hot .................. for the family to live.

(d) The mangoes are too high .................. for them to drink.

(e) The house is too small .................. for them to swim in.

(f) The sea is too rough .................. to them to reach.

S. Thurairajah
( English Tutor )

மரணம் நீடித்த பெருவாழ்வுக்குப் பெரு வழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/வண் நாவலர் மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

**05-03-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. க. சிவக்கொழுந்து J. P. (உடுப்பிட்டி)

சொற்பொழிவு: " முருகு நெஞ்சை உருக்கும் "

வழங்குபவர்: சித்தாந்த பண்டிதர் வ. ஆ. தங்கமயில்
(நில அளவையாளர்)

---

**12-03-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: திரு. செ. நடராசா (பேரவை உபதலைவர்)

சொற்பொழிவு: " காவிக் கமல கழலுடன்
சேர்த்தருள்வாய் "

வழங்குபவர்: சைவப்புலவர் க. சத்தியதாசன் (ஆசிரியர்)
(யா / சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம்)

---

**19-03-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை: S. தியாகச்சந்திரன்
(இந்து இளைஞர் மன்றம் உடுவில்)

விடயம்: " உரையரங்கு கலை நிகழ்வு "

வழங்குபவர்கள்: உடுவில் இந்து இளைஞர் மன்ற அன்பர்கள்

---

**26-03-99** வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

## ஞானச்சுடர் மாத வெளியீடு
## பங்குனி 1999

வெளியீட்டுரை: சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர்
சி. வேலாயுதம் (இளைப்பாறிய அதிபர்)

மதிப்புரை: திருமதி நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர் (இந்து நாகரிகம்)
நுண்கலைத்துறைத் தலைவர்
யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 1999 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2000 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு :
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை.
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org